Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 ர.அவ்வல் 29 (01.06.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 240

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(சி-976)

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

### மோட்டார் சைக்கிள் சகிதம்

## டூரமான வெட்டுக் காயங்களுடன் வலிக் கிணற்றில் சடலம் மீட்பு!

(நீர்வேலி)

லி இராச வீதியில் - கரந்தன் சந்திக்கு அருகாமையில் தோட் றுறு ஒன்றிலிருந்து, கொடூரமான முறையில் வெட்டிக்கொல்லப் நிம்பஸ்தர் ஒருவரின் சடலமும், அவரது மோட்டார் சைக்கிளும் ட்டன.

வேலி வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கம் சிவபாதம் (வயது 48) என்பவரே வெட்டிக்கொல்லப்பட்டவர் தெரியவந்துள்ளது.

ால்லப்பட்ட இவரின் சடலம், கோப்பாய் பொலிஸாரினால் விசார ன்பொருட்டு, யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக் டுள்ளது.

தச் சம்பவம் தொடர்பாக, மேலும் தெரியவருவதாவது-

கால்லப்பட்ட இவர், நேற்றுமுன்தினம் இரவு வியாபார நடவடிக்கை ர்பாக கோப்பாய்க்கு சென்று வருவதாகத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறையில் புதிய இராணுவ முகாம்

### எதிர்த்து இன்று மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைக் கடற்கரைப் பகுதியில், புதிய படைமுகாம் ஒன்றை அமைப்பதற்கு இராணுவத்தினர் முயற்சி செய்துவருகின்றனர்.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு அண்மையில், கடற்கரைப் பகுதியில் உள்ள காணியில், புதிய முகாம் அமைக்கும் முயற்சியில் நேற்றுமுதல் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்பகுதியில் இதற்கு முன்னரும் முகாம் அமைக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருந்தனர். பின்னர் பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து, அம்முயற்சி கைவிடப்பட்டது. தற்போது மீண்டும் நேற்றுமுதல் அப பகுதியில் முகாம் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - புதிய படைமுகாம் அமைப்பதைக் கண்டித்து, இன்று மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பொதுமக்களின் குடியிருப்புக்கள் மற்றும் பாடசாலை அமைந்துள்ள சூழலில் புதிய படைமுகாம் அமைக்கப் பட்டால், பொதுமக்களின் (10 ஆம் பக்கம் பார்க்க)

# லிகளின் கடிதத்துக்கு விளக்கம்; அரசாங்கத் தரப்பு சமர்ப்பிக்கும்?

### ரதமர் - அமைச்சர்கள் நேற்று மாலை மந்திராலோசனை

(கொழும்பு)

**அரசு முன்வைத்த இடைக்கால நிர்வாக அமைப்புக்கான மாற்றுயோசனையை நிராகரித்து, விடுதலைப் புலிகளினால் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் - அரசு, விளக்கக் கடிதம் ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்க முயற்சி செய்துவருகின்றது.**

மேற்படி விளக்கக் கடிதம் ஒன்றை அனுப்பிவைப்பது தொடர்பாக, முக்கிய அமைச்சர்களுடன் ரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று லை நீண்ட நேரமாக மந்திராலோசனை நடத்தினார்.

அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், ஜான் அமரதுங்க, திலக் மாரப்பன மற்றும் பேனாட் குணதிலக ஆகியோரை, நேற்றுமாலை தனது அலுவலகத்திற்கு அழைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மேற்படி விளக்கக் கடிதமொன்றை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைப்பது தொடர்பாகக் கலந்தாய்வு செய்தார். இந்த விளக்கக் கடிதத்திற்கான வரைபு ஒன்றும், அங்கு வைத்துத் தயாரிக்கப்பட்டது.

அரசின் மாற்றுயோசனையை நிராகரித்து, விடுதலைப் புலிகளால் - அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அரசு மீதான குற்றச்சாட்டுக்களுக்கு விரி (10ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி அலுவலகத்தில் தேடுதல்

## கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் நேரில் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி அரசியற்துறைச் செயலகத்தில் படையினருடன் இணைந்து, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தேடுதல் நடத்திய சம்பவம் குறித்து - விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினர் தமது கடும் கண்டனத்தையும், ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நேற்று யாழ்.யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமை அதிகாரி ஒலே புருண்டத்தை, அவரது அலுவலகத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் ரோக்கியோவுக்கு சென்றதும் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்

### கொழும்பில் பரபரப்புத் தகவல்கள்

(கொழும்பு)

எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதியில், ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவிவழங்கும் மாநாட்டத்திற்கு, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் சென்றதன் பின், அரசியல் சம்பந்தமான சில நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரத்தில், ஜனாதிபதி பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதால், அதற்கு ஒரு தீர்வை எட்டும் முகமாகவே - ஜனாதிபதி இந்த நடவடிக்கைகளை அறிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுசம்பந்தமாக, ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் உட்பட 20 சட்டத்தரணிகள் கொண்ட குழுவொன்று ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து அதற்காக ஒரு அமைச்சரவை ஏற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்ற சிசுவையே கொன்ற தாய்க்குத் தடுப்புக்காவல்!

### சிறிய தாயும் கொலைக்கு உடந்தை

தனது குழந்தையைப் பிறந்தவுடன் கொலைசெய்து - மண்ணில் புதைத்த தாய்க்கும், அவரது சிறிய தாயாருக்கும் நீதிமன்றால் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கைதடியில் நடைபெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

இக்குழந்தை பிறந்ததும், மேற்படி இருவரும் இணைந்தே அக்குழந்தையை கொலைசெய்து குழி தோண்டிப்புதைத்துள்ளனர். இந்தக் குற்றச்செயலைத் தாம் இருவருமே இணைந்து செய்ததாக அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதி அரியநாயகம் முன்னிலையில் - நேற்று, மேற்படி இரு (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு கருத்துக் கணிப்பு; ஜனாதிபதி நடத்தப் பணிப்பு!

(கொழும்பு)

அடுத்த தேர்தலை இலக்காக வைத்து, இலங்கையின் அரசியல் நிலைவரத்தை அறிவதற்கு ஒரு கணிப்பீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனியார் கணிப்பீட்டு நிறுவனமொன்றைக் கேட்டுள்ளார்.

இந்தக் கணிப்பீட்டில், கடந்த வருடம் ஏப்ரல் தொடக்கம் - இந்த வருடம் மே மாதம்வரை, அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி சம்பந்தமான மக்களின் நிலைப்பாட்டை அறியுமாறு (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, இந்தக்கிழமை பிரளயக் கிழமை ஆகுமோ...?



யாழ்.வந்த மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையில் - காணாமற் போனவர் ஒருவரின் தந்தை நேற்றுமுன்தினம் சாட்சியம் அளித்த காட்சி.

EXPO Aviation எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -975)

## பாடசாலை அதிபர்களே மாணவ மணிகளே

உங்களுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் எல்லாம் 10% - 20% வரையான கழிவுடன் அள்ளி வழங்கப்படும். தரமான பாடசாலை அலுவலக உள்ளீடுகள், எல்லா வகையான பாடசாலை நூல்களும், சரித்திரம், சாஸ்திரம், பிரபல எழுத்தாளர்களின் படைப்புகள், அறிவு வளர்க்கும் நூல்கள், சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், அறிவு வளர்க்கும் விளையாட்டு உபகரணங்கள் (கணிதம் கற்க), டீன் உபகரணம் (ஆங்கில உச்சரிப்பு), ஸ்கிறபல்ஸ், மோனாபொலி, அத்துடன் மக்கினற, பெனல், பச்சை போட் வகைகள், எல்லா அளவுகளிலும் பயில் (File) அலுமாரி (கபினற்) இரும்பு அலுமாரி, பாடசாலை நூல் அலுமாரி, தொழில்சார் உபகரணங்கள், விவசாய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள். எங்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக வன்னிவரை பட்டுவாடா செய்யப்படும். (சி-1028)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**212, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P 021-2225542**

## சிறுவிளம்பரம்

**(O/L) கணிதம்**

42, 45, 32 எண்களுக்குரிய கணித பாடத்தினை 38 வருட அனுபவ முடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிலிருந்து 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம். காலை.6.00-9.00 க.ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (-364)

## வயோதிபப் பெண் கைது

போதைப்பொருளை வைத்திருந்ததாகக் கூறப்படும் 69 வயது வயோதிபப் பெண் ஒருவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இவர் 700 கிறாம் எடையுள்ள ஹிரோயின் போதைப் பொருளை வைத்திருந்ததாகப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## அன்பளிப்பு

15-06-2003 இல் வரும் திருஞானசம் பந்தர் குருபூசையை முன்னிட்டு ஒரு மினிபார் சோப் மேலுறையை அனுப்பி நாயனாரின் படத்தை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளவும்.

**மினிபார் சோப் அறிமுக விலை 10/=**
**மில்க்வைற் தொழிலகம்**
**த.பெ.இல 77**
**யாழ்ப்பாணம்.** (சி-972)

## திறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
எம்.ஜி.ஆர்., நாகேஷ்,
ஜெயலலிதா, வீ.கே.ராமசாமி
**இரகசியப் பொலிஸ் -115**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
இன்றுமுதல்
**The Bock The scorpion king** (சி-974)

## ராஜா யாழ்ப்பாணம்.

3 வது வாரம்
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ்
**புதிய கீதை**
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30 (சி-973)

## ஏல விற்பனை

பின்வரும் பொருட்கள் 07.06.2003 அன்று காலை 11.00 மணியளவில் ஏலத்தில் விடப்படும். எடுப்பவர்கள் உடனே பணத்தைச் செலுத்தி அன்றே அப்புறப்படுத்த வேண்டும்.

1. பழைய மின் விசிறிகள்
2. ரியூப்லைட் தகரங்கள்
3. பழுதடைந்த குளிரூட்டிகள்
4. பழைய யன்னல் கதவுகள்
5. கதவு நிலைகள்

யாழ். போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்
(சி-1025)

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்,
அழகிய சங்குப் பற்களைப் பொருத்தவும்,
மிதப்புப் பற்களுக்குச் சிறந்த முறையில்
கிளிப் போடவும் நாடுங்கள்.

## எரிக்கனேஸ்

**மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்**
564. 566 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்
T.P. 222 2486, கிளை : கொக்குவில், சுன்னாகம் (சி-1027)

குறிப்பு: சுன்னாகக் கிளையில் விசேட கழிவு உண்டு

## தூண்டி இலக்கிய வட்டம்

நடாத்தும்

## ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கு

இடம்:- நூலக கேட்போர் கூடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

**01.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி**

அமர்வு -1

*தலைமை:-* கலாநிதி. எம்.ஏ.நுஃமான்
தமிழ்த்தாய் வாழ்த்து
மௌன அஞ்சலி
வரவேற்புப் பா
தலைமையுரை
☆ ஆய்வாளர்:- திரு. பா.அகிலன்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
ஊர்வசி
சிவரமணி
மைதிலி அருளையா
ஆழியாள்
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு. மு.பொன்னம்பலம்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
இ.முருகையன்
சில்லையூர் செல்வராசன்
தருமு சிவராம்
ஆத்மா
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு.அ.யேசுராசா
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
அஸ்வ்கோஸ்
றஷ்மி
கருணாகரன்
அமரதாஸ்
*கலந்துரையாடல்*
☆ கவிதை நாடகம்
நன்றியுரை

**01.06.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 1.30 மணி**

அமர்வு - 2

*தலைமை:-* பேராசிரியர் அ.சண்முகதாஸ்
☆ ஆய்வாளர்:- கலாநிதி.செ.திருநாவுக்கரசு
*ஆய்வுக்குட்படும் க்விஞர்கள்:-*
மஹாகவி
ச.வே.பஞ்சாட்சரம்
காரை.சுந்தரம்பிள்ளை
கல்வயல்.வே.குமாரசாமி
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- திரு.சோ.பத்மநாதன்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
காசி ஆனந்தன்
ஈழவாணன்
நட்சத்திரன் செவ்விந்தியன்
த.ஜெயசீலன்
*கலந்துரையாடல்*
☆ ஆய்வாளர்:- கலாநிதி. எம்.ஏ.நுஃமான்
*ஆய்வுக்குட்படும் கவிஞர்கள்:-*
சுபத்திரன்
சண்முகம் சிவலிங்கம்
புதுவை இரத்தினதுரை
சாருமதி
கலந்துரையாடல
☆ கவிதை நாடகம்
நன்றியுரை

ஊடக அனுசரணை: நமது ஈழநாடு

## உடல் ஆரோக்கிய நிலையம்

## SLIM BODY CARE CENTRE

மத்திய கல்லூரி முன்பாக - அச்சுவேலி

## திறப்பு விழா அழைப்பு

யாழ். குடாநாட்டில் முதலாவது உடல் ஆரோக்கியநிலையமான SLIM BODY CARE CENTRE முற்றிலும் நவீன இலத்திரனியல் சாதனங்களைக்கொண்டு ஊளைச்சதை, தொந்தி போன்றவற்றை நீக்குவதுடன் வயதிற்கேற்ற உடல்அமைப்பு, உயரத்திற்கேற்ற உடல்நிறை என்பனவற்றைப் பேணக்கூடிய வகையில் பயிற்சி வழங்கும் நிலையமாக 02-06-2003 திங்கட்கிழமை (நாளை) பகல் 12.00 மணிக்கு அச்சுவேலியில் உதயமாகின்றது.

அனைவரும் கலந்துகொண்டு திறப்பு விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு.க.சந்திரலிங்கம்
(குடும்பத்தினர்)

அச்சுவேலி. (-363)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

சிற்பச்சக்கரவர்த்தி கலாபூஷணம்

### ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்



நீள நினைந்து நின் வழியிலே நடந்து
ஈர விழிகளுடன் இருக்கின்றோம்.
எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டும் ஆகியதோ?
ஓராயிரம் வருடம் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகளே எங்களது வாழ்வாகும்.

குடும்பத்தினர்.

**ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி.**

# கடற்பிரச்சினைகளைத் தீர்க்கும் யோசனை; விரைவில் பதில் அனுப்புமாறு கோரிக்கை!

## இரு தரப்பிடமும் கண்காணிப்புக்குழு விடுத்தது



விடுதலைப் புலிகளின் கடல் வழிப் போக்குவரத்து மற்றும் கடற்பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் முன்வைக்கப்பட்ட சிபார்சு யோசனைகள் குறித்த கருத்துக்களை, விரைவில் தமக்கு அனுப்பி வைக்குமாறு, போர்நிறுத்தக் கண்காணிப்புகுழு - அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் கோரியுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

விடுதலைப் புலிகளின் கடல் வழிப்போக்குவரத்து, பயிற்சிகள் மற்றும் கடற்கண்காணிப்பு நடைமுறைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சிபார்சு அறிக்கையொன்றைத் தயாரித்திருந்தது.

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாகவே, இந்தச் சிபார்சு அறிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன் தயாரித்திருந்தார்.

இவரது முதலாவது கட்டச் சிபார்சு அறிக்கையை அரசாங்கம் நிராகரித்ததையடுத்து, இரண்டாவது அறிக்கை அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுப் பல வாரங்களாகிவிட்ட போதும், இரு தரப்பினரிடமிருந்தும் கண்காணிப்புக்குழுவுக்குப் பதில் ஏதும் அனுப்பப்படவில்லை.

இதையடுத்தே, இந்தச் சிபார்சு அறிக்கை குறித்த பதிலை விரைவாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வட-கிழக்குப் பகுதிகளில் போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் வகையில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களின் தொகை, இம் மாதத்திலிருந்து 57 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாகவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை 48 கண்காணிப்பாளர்களே இப்பணியில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்திட்டம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் - கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அபாயக்கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

'யுனிசெப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின் மூலம், இதுவரை 11 பாடசாலைகளைச் சேர்ந்த 2,376 மாணவர்களும், கொழும்புத்துறை கிழக்கு, மேற்கு பகுதிகளைச் சேர்ந்த 147 பொதுமக்களும் பயனடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. (சு)

### கிணறுகளில் எண்ணெய்க் கசிவு

அரியாலை சனசமூக நிலைய வீதியிலுள்ள பெற்றோல் நிலையத்தினால், அருகிலுள்ள வீடுகளின் கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்படுவதாக, வீட்டு உரிமையாளர்களினால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையொன்றை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி மாநகர சுகாதார பணிமனையையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் நீதிமன்றம் கோரியுள்ளது.

இந்த உத்தரவையடுத்து, நேற்று முன்தினம் சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகாரிகள் குழு, அவ்விடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டது. (55)

### வெளிநாட்டு உதவிகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிர்வகிக்கப்படும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு - சுவிஸ் நாட்டில் உள்ள தமிழர்களும், அங்குள்ள ஆலய நிர்வாகசபைகளும் உதவிகளை வழங்கி வருகின்றன.

இவ்வகையில், மங்கையற்கரசி மகளிர் கல்லூரி, கதிரொளி சிறுவர் இல்லம், அன்புச்சோலை மூதாளர் பேணகம் ஆகியவற்றுக்கு சுவிசிலுள்ள ஆலய நிர்வாகங்களும், பாரதி குழந்தை பராமரிப்பு இல்லம் ஆகியவற்றிற்கு சுவிஸ்வாழ் தமிழ் மக்களும், முதியோர் இல்லம் அமைப்பதற்கு சுவிஸ்வாழ் தமிழ் இளைஞர்களும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

(122)

## ஜனாதிபதியின் உத்தரவை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்!

### பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவுகளை மீறும் அரச உத்தியோகத்தர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி எச்சரித்துள்ளது.

பொ.ஐ.முவின் பேச்சாளர் சரத் அமுனுகம, இது தொடர்பாகத் தகவல் வெளியிடுகையில் -

தேசிய லொத்தர்சபையை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்ற பின்னர், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்குமாறு அரச அச்சகருக்கு உத்தரவிடப்பட்டது.

ஆனால், இந்த உத்தரவு இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஜனாதிபதியின் உத்தரவை மதிக்கத்தவறும் உத்தியோகத்தர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விவகாரம் தொடர்பாக - பிரதமருக்கு இரண்டு கடிதங்களை ஜனாதிபதி எழுதியும் பதில் அனுப்பப்படவில்லை.

'சண்டி மல்லி' கொலை தொடர்பாக விசாரணை நடப்பதாகவும் பிரதமர் கூறினார். ஆனால், இக்கொலை தொடர்பாக, ஒருவர் கூடக் கைது செய்யப்படவில்லை.

சண்டியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, நாளை மறுநாள் கொழும்பில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இதுவரை இராணுவத்துக்கு உதவியாகச் செயற்பட்ட 24 புலனாய்வாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பிரதமர் இந்தக் கொலைகள் குறித்து, விசாரிக்க நியமித்த விசாரணைக்குழுவால் எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. கொலைகள் தொடர்ந்து இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இப்போது, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பொலிஸாரையும் தாக்கத் தொடங்கியுள்ளனர். 'ஹில்டன்' ஹோட்டேலில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்கு எல்லை மீறிவிட்டார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புகைப்பதால் வருடாந்தம் 750 பேர் இறக்கின்றனர்!

இலங்கையில், வருடாந்தம் 750 பேர் புகைப்பதால் மரணமடைவதாக 'உலக சுகாதார நிறுவனம்' தெரிவித்துள்ளது.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையிலேயே - இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

புகைப்பழக்கமுடைய ஒருவர், வருடாந்தம் 1,940 சிகரட்களைப் புகைப்பதாகவும், உலகெங்கும் 5 லட்சம் பெண்கள் புகைப்பழக்கமுடையவர்களாக இருப்பதாகவும், உலக சுகாதார நிறுவன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து மீள்குடியமரும் முஸ்லிம் மக்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்து ஆராய்வு!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில், முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான மாநாடு, நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம், தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் - வன்னிமாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் மற்றும் முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை, வேப்பம்குளம், மறிச்சுக்கட்டி, கொக்குப்படையான், முள்ளிக்குளம் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், மீளக் குடியமரவுள்ளனர்.

இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகள் இருக்கின்றனவா என்பது பற்றி இக்கூட்டத்தில், ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பின்போது, மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண உதவி, மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வசதிகள் வழங்குதல், அடிப்படைச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (201)



மருதங்கேணியில் இடம்பெற்ற கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கோப்பாய் பிரதேச செயலர் சீனிவாசன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம் (09)

### திருமலையில் சுட...

## ராணுவ ... ஆபத்தா...

திருகோணமலை நகரில் ... நேற்று முன்தினம் இனந்தெரிய... ரால் சுடப்பட்டு படுகாய... இரண்டு இராணுவப் புலனாய்வா... களும், ஆபத்தான நிலையில் இ... பதாக வைத்தியசாலை வட்டா... கள் தெரிவித்தன.

உவர்மலைப் பகுதியில், நே... முன்தினம் நண்பகல் கோப்... சிசிரகுமார மற்றும் மகேந்திர...

## சிறு செய்திகள்

### பஸ்சேவை நேரத்தை மாற்றக் கோரிக்கை

(நாவற்குழி)

நாவற்குழி ஊடாக தச்சன்தோப்பு வரை இடம்பெற்றுவரும் பஸ் சேவையின் நேரத்தை மாற்றுமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையை மக்கள் கோரியுள்ளனர்.

தினமும் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் 809 ஆம் இலக்க பஸ் சேவையை - பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன ஊழியர்களின் நன்மை கருதி தினமும் காலை 7 மணிக்கு நடாத்துமாறு, இப்பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (108)

### கையொப்பம் பெற்றும் பணம் வழங்கவில்லை

யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி மேற்கு பிரதேச மக்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு முன்னுரிமைப்படுத்தி வழங்கப்படாதது குறித்து இப்பகுதி மக்கள், விசனமடைந்துள்ளனர்.

நாவற்குழி கிராமசேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த மக்களிடம் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கென கையொப்பம் பெறப்பட்டு 6 மாதங்களாகியும், பெரும்பாலானோருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை என அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளனர். (108)

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

(தென்மராட்சி)

நாவற்குழிச் சந்தியில் இருந்து, கேரதீவுக்குச் செல்லும் பிரதான வீதியில் - தனங்களப்பு வரையிலான நான்கு மைல் தூரப் பகுதி, நீண்டகாலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இவ்வீதியால், பயணம் செய்வோர் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இந்த வீதியைத் திருத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. (108)

### இணையத்தளம் ஆரம்பம்

(ஆழியவளை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாட்டுத்திட்டங்களை விளக்குவதற்கும், ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்த, திட்டமுன்னெடுப்புக்களை சர்வதேசமெங்கும் வெளிக்காட்டுவதற்கும் இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. (122)

### காலம் கடந்த இறப்புக்களை பதிய ஏற்பாடு

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலங்கடந்த இறப்புக்களைப் பதிவதற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக, உரிய காலத்தில் பதிய முடியாமற்போன 54 இறப்புக்கள் - உதவி அரசாங்க அதிபர் பணிமனை மூலம் விசாரணை செய்யப்பட்டு அண்மையில் பதியப்பட்டன.

# வலி.வடக்கு மீள்குடியமர்வு பிரதமர் கவனத்திற்கு வரும்

வலி-வடக்கின் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான விடயம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாமல் இன்னமும் அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு அகதிமுகாம்களில் வாழும் மக்களின் பிரதிநிதிகளுடன், வலி-வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக - சென்ற மாதம் 30 ஆம் திகதிக்கிடையில், தாம் அரசிடமிருந்து பதிலைப் பெற்றுத்தருவதாக அரச அதிபர் உறுதியளித்திருந்தார். ஆனால், இதுவரை திட்டவட்டமான பதில் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை என்றும், எனவே தாம் இவ்விடயம் குறித்து பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவரப்போவதாகவும் வலி. வடக்கு வெகுஜன அமைப்புக்களின் தலைவர் சி.சிவமகாராஜா தெரிவித்தார்.

இதற்காக இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களின் கடிதங்களைத் திரட்டிப் பிரதமருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நடமாடும் வைத்திய சேவை

வடமராட்சி கிழக்கில் நாளை முதல் நடமாடும் சுகாதார வைத்திய சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் உதவியுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையும் மருதங்கேணிப் பிரிவும் இச்சேவையை நடாத்துகின்றன. (122)



நமது ஈழநாட்டின் அனுசரணையுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட கலாசார விழாவில் இடம்பெற்ற, நற்குணராஜாவின் நெறியாள்கையில் உருவான - "மாப்பிள்ளை தேவை" என்ற நாடகத்தின் ஒரு காட்சியை படத்தில் காணலாம். (46)

# மூன்று லட்சம் மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்வு

உள்ளூரில் இடம்பெயர்ந்த மூன்று லட்சத்து இரண்டாயிரத்து ஐநூற்றி அறுபத்தாறு பேர் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக 'ட்ரிபிள் ஆர்' அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து 2003 ஏப்ரல்வரை - வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே இத்தொகையளவு இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக மேற்படி அறிக்கை தெரிவித்துள்ளது.


## வாழ்க வளமுடன்




### நான்காவது அகவையில்

பெயர் : பூ.யதுமன்
முகவரி: மூளாய் தெற்கு, சுழிபுரம்.



### நான்காவது அகவையில்



பெயர் : ந.ஜெயலக்சிகா
முகவரி: தபாற்கந்தோர், பரந்தன்.

### எட்டாவது அகவையில்

பெயர் : உ.நவயூட்
முகவரி: பொன்னையா வீதி, ஆறுகால்மடம்.



### பத்தாவது அகவையில்



பெயர் : வ.சுஜீவன்
முகவரி: கரவெட்டி வடக்கு, கரவெட்டி


# தொலைத்தொடர்பு கோபுரத்துக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததால் வன்னியில் இணைப்பு வழங்குவது தாமதம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் தொலைபேசிப் பரிவரத்தனை நிலையத்தை அமைக்கும் பணிகள் தாமதமடைவதற்கு, தொலைத்தொடர்புக் கோபுரத்தை எடுத்துவருவதற்குப் படைத்தரப்பின் அனுமதி கிடைக்காமையே காரணம் என்று ரெலிகொம் நிறுவனத்தின் வட-கிழக்கு மாகாண பொதுமுகாமையாளர கனகசூரியர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் 100 மீற்றர் உயரமுள்ள கோபுரத்தையும், பரந்தனில் 60 மீற்றர் உயரமுள்ள கோபுரத்தையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கோபுரங்களை கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு மேலாகியும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்படாததால் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை அமைக்கும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் மூலம் 500 இணைப்புக்களை வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், தற்போது 60 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய இணைப்புக்களை வழங்குவதற்குத் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்படுத்துவது முக்கியம். இந்தக் கோபுரங்களின் மூலமே புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பகுதிகளுக்கு இணைப்புக்களை வழங்க முடியும்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தாமதமடைவதால், வன்னிப் பகுதிக்கான தொலைபேசி சேவைகளை விஸ்தரிப்பதில் பெரும் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# தன்னைத் தானே சுட்ட பொலிஸ் சார்ஜன்ட்!

அனுராதபுர பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக் கொண்டதில் படுகாயமடைந்தார.

இவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட சார்ஜன்ட் - தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒருவர் என்றும், வழக்குகள் தொடர்பான சான்றுகளை ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்க வந்தபோதே, இவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சமாதான விழிப்புணர்வுக்கு சர்வமத செயலணிக்குழு!

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டியதன் அவசியம் குறித்து நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குச் சர்வமத செயலணிக்குழுவொன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நாடு முழுவதும் கிராமிய மட்டத்தில் செயற்படும் வகையில், மேற்படி சர்வமத செயலணிக்குழு அமைகக்கப்படவிருக்கிறது.

கிராமிய மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பான வழிப்புணர்வை வளர்த்துக்கொள்வதற்காக இச்செயலணி நாடளாவிய ரீதியில் செயற்படும்.

அனைத்து மதத்தலைவர்களையும் இணைத்து, அவர்களின் பங்களிப்புடன் இம்முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது. மெதடிஸ்த திருச்சபை மேற்படி முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ள எழுதுவினைஞர், கணக்குப்பதிவாளர் உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை விர[illegible]ளும், விளக்க கலந்துரையா[illegible]நம் - யாழ். மத்திய கல்லூரி [illegible] மண்டபத்தில் சனி, ஞாயிறு [illegible] விடுமுறை நாட்களில் நடை[illegible] ஒழுங்குகள் செய்யப்பட்டுள் [illegible]நிதிப் பிரமாணங்கள், தாபனக் [illegible]வ விடய விரிவுரைகள் மட் [illegible] இவ்வகுப்பில் இடம்பெறும். [illegible]தில் கலந்து கொள்ள விரும் [illegible]கள் யாழ்.மத்திய கல்லூரியில் [illegible]ங்கும் மகேஸ்வரி கணினிவள [illegible]லய இணைப்பாளருடன் தொடர்பு [illegible]ண்டு - தங்களது பெயரை பதிவு [illegible]ய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. [illegible]னைய திணைக்கள பதவியுர்வு [illegible]ட்சைக்கு தோற்ற இருப்பவர்களும் [illegible]வ்வகுப்பில் கலந்து கொள்ளலாம் [illegible]ன்பது குறிப்பிடத்தக்கது.

## குருகுலத்தில் வகுப்புக்கள்

அந்தண மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க - யாழ்ப்பாணம் இந்து குருமார் ஒன்றியத்தின் குருகுல பாடசாலையில் வேதம், சூக்தம், நியாசம் என்பன கற்பிக்கப்பட்டு வருகின்றன.

தினமும் மாலை ஆறு மணி தொடகம் எட்டு மணிவரை நடைபெற்று வரும் இவ்வகுப்பில் - வயதுக் கட்டுப்பாடின்றி எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என குருமார் ஒன்றிய செயலாளர் தெரிவித்துள்ளார்.



கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள கெபியைப் படத்தில் காணலாம். (படம் - சுதர்சன்




# தமிழர்களின் பாரம்பரிய மரபுவழி உடற்பயிற்சிக் கலை

**2001.04.21** அன்று தும்பளை சிறுமலர்கள் பாடசாலையின் 20 ஆவது வருடாந்த நிகழ்வில் - விழாவின் தலைவர்



சட்டத்தரணி சபா ரவீந்திரன் (**J.P.U.M.**), பிரதம விருந்தினர் அ.கனகரட்ணம் (அதிபர், வட - இந்து மகளிர் கல்லூரி), மாணவர்கள், பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பு நிகழ்ச்சியாகத் தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை வீச்சுமுறைகள் வீசிக் காண்பிக்கப்பட்டன.

மூன்றாவது முறையாக மாணவர்களின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு - பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் 9.5.2001 புதன்கிழமை மாணவர்கள், ஆசிரியர்கள் முன்னிலையில் கரலாக்கட்டை வீச்சுக்களின் பெயர்களும், விளக்கவுரைகளும், எந்த எந்தத் தசைநார்க்கட்டுக்களுக்குரிய வீச்சுக்கள் என்ற விபரங்களும் சொல்லப்பட்டன. வித்தியாலயத்தின் உப அதிபர் விழாவிற்குத் தலைமைவகித்து, இறுதியில் தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை பற்றி உரையாற்றினார்.

18.6.2001 கொழும்பு வீரகேசரி பத்திரிகையில் ஆரோக்கிய அறிவியல் பகுதியில், வி.அற்புதானந்தன் அவர்கள் கரலாக்கட்டை நிகழ்ச்சி பற்றி சொல்லியிருந்தார்.

இந்துசமய கலாசார அமைச்சின் அனுசரணையுடன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய பொங்கல் விழா - 12.1.2002 அன்று யாழ்ப்பாணம், மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அனுமார் ஆகாய வீச்சு உட்பட விளக்கவுரைகளுடன், தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை நிகழ்ச்சி வீசிக் காண்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

**இப்பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள்**

கரலாக்கட்டைகள் பாரம் கொண்ட மரத்தினால் உருவாக்கப்படுகின்றன. கனமான, வைரம்பாய்ந்த மரக்குற்றிகளைக் கொண்டு தேர்ச்சிபெற்ற தச்சுத்தொழிலாளி மூலம் வேண்டிய உருவமைப்பில், வேண்டிய நிறைகளில் கரலாக்கட்டைகளை உருவாக்கலாம். முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய அம்சம் யாதெனில் - ஒரு சோடிக் கரலாக்கட்டைகளை உருவாக்கும்போது இருகட்டைகளும் சமநிறையுள்ளனவாக இருக்க வேண்டும். உருவமைப்பும், உயரமும் சமபரிமாணத்தில் இருக்கவேண்டும். உருவமைப்பில் எடையில் வித்தியாசம் இருந்தால், பயிற்சிகளில் முறைகேடு ஏற்படும். அதனால், சீரான உடலமைப்பைப் பெறமுடியாது.

இப்பயிற்சி பெரும்பாலும் கைகளின் மணிக்கட்டுக்கள், முழங்கைமூட்டுக்கள், தோல்மூட்டுக்கள் ஆகியவற்றிலுள்ள **SKELETAL MUSCLES** வன்கூட்டுத்தசைநார் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றது. அதுமட்டுமல்ல, நெஞ்சிலுள்ள **PECTORAL** நெஞ்சுரத்தசைநார் கட்டின் வளர்ச்சிக்கும் இப்பயிற்சி பெரிதும் உதவிசெய்து வளர்ச்சியைக் கொடுக்கின்றது. ஆனால், தற்போது உடம்பின் மூன்று பகுதிகளுக்கும் பயன்படக்கூடிய வீச்சுமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றது

**பயிற்சி செய்யும்போது முக்கிய கவனிப்பு**

எந்தப் பயிற்சியாயினும், பயிற்சியின்போது உரிய முறையில் சுவாசம் மேற்கொள்ளப்படவேண்டும். தவறினால் பயிற்சியின் பலனை அடையமுடியாது. தவறான சுவாசமுறை, சுவாசப் பைகளில் சில தாக்கங்களுக்கு இட்டுச்செல்லும். மூச்சை அடக்கிக்கொண்டு இப்பயிற்சியைச் செய்யக்கூடாது. பயிற்சியின்போது - மூச்சு இழுப்பதும், மூச்சு விடுவதும் முக்கியமானதொன்று. நீங்கள் பயிற்சி செய்கின்றபோது முறையாகச் சுவாசம் செய்யாவிட்டால் அது நுரையீரலையும் பாதிக்கும்.

உதாரணத்திற்கு - கரலாக்கட்டை பயிற்சி மூலம் **PECTORAL** நெஞ்சுரத்தசைநார் கட்டுக்களுக்குப் பயிற்சி கொடுக்கும்போது, சமநிறை கொண்ட இரு பயிற்சிக்கட்டைகளையும் இருகைகளாலும் கீழிருந்து மேல் நோக்கிக் கொண்டுவரும் போது மூச்சை இழுக்கிறோம். இப்படியே இரு கட்டைகளையும் நெஞ்சுப் பகுதியை நோக்கி உள்பக்கமாக வீசி, கட்டைகளை மீண்டும் உயர்த்திக் கைகளை அகலமாக விரித்து கீழ்கொண்டு வரும் போது, மூச்சைவிடுகிறோம். அதாவது, பயிற்சி செய்கின்ற போது, உடலிலே தாக்கம் ஏற்படும் நேரத்தில் சுவாசத்தை வெளியேற்றவேண்டும்.

சுகாதாரமான, காற்றோட்டமுள்ள இடத்தில் இப்பயிற்சியைச் செய்யவேண்டும். அப்போதுதான் அதிக பிராண வாயுவை நீங்கள் பெற்றுக்கொள்ள லாம். அதிக பிராண வாயுவை நீங்கள் பெறுவதால், களைப் பின்றி நீண்ட நேரம் பயிற்சியைச் செய்ய முடியும்.



**இப்பயிற்சியை எப்படிச் செய்யவேண்டும்.**

முதலில் இப்பியற்சியை ஒரு குருவின் மூலம் பயிலவேண்டும். குருவில்லா வித்தை 'பாழ்' என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். எண்ணிக்கை அதிகம் செய்வதைவிட, முழுமையான தவறற்ற விதத்தில் செய்வது முககியம். உட்ம்பை ஆட்டாமல் நேராகநின்று உரிய பயிற்சி தொடங்கும்போது மூச்சை நன்றாக இழுத்து, அதே பயிற்சி முடிவடையும்போது மூச்சை வெளியேற்ற வேண்டும். கரலாக்கட்டை சுழற்றும்போது இருகட்டைகளும் சமநிறையுள்ளதாக இருக்கவேண்டும். பயிற்சியின்போது இருகைகளும் சீராகச் செயற்படவேண்டும். உதாரணத்திற்கு - வலதுகையால் பத்துச் செய்முறைகளைச் செய்தால், இடதுகையாலும் பத்துச் செய்முறை களைச் செய்யவேண்டும் இது முக்கியம். சிலர் வலதுகையால் எடை கூடிய கட்டைகளை கையாள்வதுடன், அதிக எண்ணிக்கை யிலும் இப்பயிற்சியைச் செய்யமுற்படுவர். இடதுகையினால் எடைகுறைந்த கட்டைகளைக் கையாண்டு குறைந்த எண்ணிக்கையிலான பயிற்சியில் ஈடுபடுவர். அப்படி ஒருகையினால் அதிகமாகவும் (வலது), அடுத்த கையினால் (இடது) எண்ணிக்கை குறைவாகவும் பயிற்சி செய்யக்கூடாது. (தொடரும்..)

பொ.மகாதேவா

---

# உதைபந்தாட்டத்தில் சட்டங்களின் அவசியம்

உதைபந்தாட்டம் ஒரு மனிதனின் உள் உணர்வுகளினால்
ஏற்படும் கிளர்
பவமேயாகு
**tional Ex**
ஆட்டம் ஆரப்
யும்வரை ஆ
பார்வையாள
தின் ஆழத்
கையினதும்,
நம்பிக்கையி
உணர்வுக்கி
பரந்து, உ
கிளர்ச்சி ஏ
படுவதை ப
வையாளராக



அனுபவித்தவர்களுக்குத் தெரியும். உதாரணமாக- மைதானத்தில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக ஆடும் போது, மைதானம் மிக அமைதியாகக் காணப்படும். இதேவேளை - ஒரு அணி மிகவும் பலமாகவும், மற்றைய

**- எவ்.எக்ஸ்.சுதர்ஸன் -**

அணி பலம்குன்றியதாகவும் ஆடுகின்றபோது பார்வையாளர்கள் மத்தியிலே கூச்சல், குழப்பங்கள் காணப்படும். ஒரு ஆட்டக்காரனின் பந்தை அவனிடமிருந்து பறித்துச் சென்று கோல் பெறும்போது, உயரே எழுந்து வந்த பந்தை தலையினால் இடித்துக் கோல் போகச்செய்தாலே

## உதைபந்தாட்டம் ஒரு விவரணம்

அல்லது காப்பாளர் ஆகாயத்திலே பறப்பதுபோலப் பறந்து, கோல் ஒன்றினைத் தடுக்கின்றபோது பார்வையாளர்களாக இருக்கின்ற அவையினரின் இரத்தமும் சூடேறிக் குறையும். பல சந்தர்ப்பங்களில் மயிர்க்கூச்செறிவதுமுண்டு. எனவே தான், உதைபந்தாட்டம் உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்யும் ஓர் ஆட்டமென்று அழைக்கிறார்கள்.

ஒவ்வொரு ஆட்டத்தினதும் உயிர்நாடியை (**Spirit of the Game**) நாம் புரிந்துகொள்ளவேண்டும்.



உதைபந்தாட்ட
ஆராயும்போது,
ஆட்டத்தின் உ
கொள்ளலாம். உ
சட்டங்கள் மூன்று
விடயங்களைத்
படுத்துகின்றன.

(1). சமத்துவம் (
**ty)**

(2). பாதுகாப்பு (
**ety)**

(3). மகிழ்ச்சி (
**ment)**

**சமத்துவம்**

சமத்துவம் என்
குறிப்பதாகும்.
ரமோ உதைபந்
லது பாதகமான நி
விளையாட்டுக்கள்
மில்லை. இதி
திறமையைக
உடலின் அளவு
முக்கியமானதாக
கருதப்படுவதில்லை

**essntial requirement for success in soccer).**

**பாதுகாப்பு**

எந்தவொரு விளையாட்டுக்கும் சட்டம் உருவாக்கப்படும்போது, அது வீரரைப் பாதுகாக்கும் நோக்குடனேயே உருவாக்கப்படுகின்றது. ஆடுகள அளவு, பந்தின் பருமன், நிறை, காற்றழுத்தம், வீரர் அணியவேண்டிய அணிகலங்கள், கொடிக் கம்பத்தின் அளவு போன்றவை அனைத்தும் வீரரின் பாதுகாப்பைக் கவனத்திற் கொண்டே ஆக்கப்படுகின்றன.




இதேவேளை - ஆட்டக்காரருக்கு அபாயம் ஏற்படாத வகையில், ஆடும்முறை இருக்கும் வண்ணமும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்பொழுது ஷின்காட் (**Shinguard**) என்னும் "கீழ்க்கால் - காப்பு" கட்டாயம் அணியவேண்டும் என்பது விதி. இதில் சுயபாதுகாப்பு கவனிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

இதேவேளை - தவறான ஆட்டத்திற்கும் தவறான நடத்தைக்கும் தண்டனை கொடுப் பதன் மூலம் தவறான ஆட்டமும், நடத்தையும் நிகழாத வண்ணம் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் வீரர்கள் சிறந்தமுறையில் ஆடவும், பார்வையாளர்கள் சிறந்த ஆட்டத்தினைக் கண்டுகளிக்கவும் இச்சட்டங்கள் வகை செய்கின்றன.

# புயலாகி மின்னலாகினார்



தமயந்தி தர்ஷா

ஆசிய GRAND PRIX இன் முதலாவது ஆட்டம் அஹமதபாத்தில் முடிவடைய, இரண்டாம் கட்டம் ஜூன் முதலாம் திகதி இலங்கையில் ஆரம்பமாகின்றது. அஹமதபாத் போட்டிகளில் இலங்கையின் சுசந்திகா ஜயசிங்க எதிர்பார்ப்பை ஏமாற்றாமல் கலக்கியிருக்கிறார். ஆசியாவின் 100M தூரம் என்பது சுசந்திகாவுக்குத்தான். இதனை யாரும் அசைக்கமுடியாது. ஆரம்பத்தில் சிறிது பிழைவிட்ட சுசந்திகா - முதலாவதாக ஓடிக்கொண்டிருந்தாலும், 80M இல் உஸ்பெஸ்கிஸ்தான் நாட்டின் குஷேல் குபேவாவின் வேக ஆபத்தை உணர்ந்து, வேத்தை அதிகப்படுத்தித் தங்கப்பதக்கத்தை 11.30 செக்கனில் வெல்ல, 11.35 செக்கனில் குபேவா இரண்டாம் இடத்தையும், தாய்லாந்து வீராங்கனை 11.45 இல் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இதில் விசேடம் என்னவெனில், கடந்த வருடம் இதேதூரம் இலங்கையில் தமயந்தி தர்ஷாவால் 11.52 செக்கன்களில் ஓடப்பட்டது. அது இப்போது, முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - 400M ஆண்களுக்கான ஓட்டப்போட்டியில், றோகான் பிரதீப்குமார 45.95 செக்கன்களில் முதலிடம்பெற, சுகத் திலகரட்ண 46.28 செக்கன்களில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். இந்திய வீரர் அனில் றோகில் 47.77 செக்கன்களில் மூன்றாம் இடம்பெற்றுள்ளார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக 400M போட்டியில் தமயந்தி தர்ஷாவை இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டு, கசகஸ்தான் நாட்டின் சுவெட்லானா 52.59 செக்கனில் முதலிடம் பெற்றுக்கொண்டார். 100M ஆண்கள் குறுந்தூர ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றவர் கசகஸ்தான் நாட்டின் வீரர் ஜெனாடி சேர்நோவொல். இவர் எடுத்துக்கொண்ட நேரம் 10.42 செக்கன்கள். தாய்லாந்தைச் சேர்ந்த வீரர்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை தடைதாண்டல் போட்டியில், சிறியாணி குலவன்ச இரண்டாம் இடமும், இந்திக குமார டீ சில்வா இரண்டாம் இடமும் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தககது. மொத்தத்தில் இலங்கைக் குழுவினர் 2 தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப்பதக்கங்களைத் தங்கள் கணக்கில் சேர்த்துக்கொண்டனர்.



சுசந்திகா

இந்த நிகழ்வில், உண்மையில் ஏமாற்றமடைந்தவர்கள் இந்தியக் குழுவினர் என்றே கூற வேண்டும். ஏனெனில், இந்தியாவால் தங்கப்பதக்கங்கள் எதனையும் பெற்றுக்கொள்ள இயலவில்லை. இதேவேளை, சார்ஸ் வைரஸ் பதட்டத்தால் மிகவும் பலம்வாய்ந்த சீனா இப்போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை. சீன வீர, வீராங்கனைகளின் பிரசன்னம் இருந்திருந்தால், பல பதக்கங்கள சீனாப பக்கம் சென்றிருக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை. இதேவேளை, மத்திய ஆசிய நாடுகளைக் கவனமாக அவதானிக்க முடிகிறது. கச்கஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், கிர்கிஸ்தான் போன்ற நாடுகள் தடகளப் போட்டிகளில் தங்கள் இருப்பை வெகுவாகவே நிரூபித்து வருகின்றன. இந்நாடுகள் முன்னைய U.S.S.R. இன் அங்கங்கள். சோவியத் நாடு ஒலிம்பிக் போட்டிகளில், முதலிடம் பெறக்காரணமாக இருந்தவர்களில் இவர்களும் அடக்கம். தற்போதைய நிலையில் இந்த நாடுகள் உட்பட மத்திய ஆசியப் பிராந்தியத்தில் தடகள ஆதிக்கம் மையம் கொள்வதை மறுக்கமுடியாது.

- றோஜா -

# பாகிஸ்தானின் புதிய உதயம்

'எனது நாடு, எனக்குப் பெற்றுத் தந்தவைகளுக்கு நான் நன்றிக்கடன் செலுத்த விரும்புகிறேன்' என்று கூறுபவர் பாகிஸ்தானின் நாடாளுமன்ற அங்கத்தவரும், முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவரும், உலகின் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவருமான இம்ரான்கான். உலகக்கோப்பைத் தோல்வியின் பின், ஒரு இளம் பாகிஸ்தான் கிரிக்கெட் படை மீண்டெழுந்து சார்ஜா கோப்பையை வென்றமை அதையடுத்து இலங்கையில் நடைபெற்ற முத்தரப்புப் போட்டிகளில், முதன்மைநிலை இரண்டை அடைந்தமை என்பன பாகிஸ்தான் அணிக்குச் சாதகமான நிலைதான். மேலும், தற்போதைய அணியைப் பார்த்தாலே தெரிகிறது இந்த அணி புயலாக மாறும் நாள் தொலைவில் இல்லை என்பது. இந்த நிலையில், இம்ரான்கானின் இந்த அறிக்கையுடன் பாகிஸ்தான் அணியின் வளர்ச்சியில் இம்ரான்கான் தன்னை இணைத்துக்கொள்வதை உறுதிப்படுத்தியுள்ளது நிச்சயமானது. அவர், கிரிக்கெட் பயிற்றுநராக வரவுள்ளதாகத் தெரிவித்துள்ளளார்.



இம்ரான்கான்

பாகிஸ்தான் உள்ளூர் கிரிக்கெட் - பிராந்தியரீதியாக அல்லாமல், நிறுவன ரீதியாக அமைந்துள்ளமை இவரால் குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. பாகிஸ்தானின் முதற்தரக் கிரிக்கெட்டின் கட்டமைப்பை மாற்றியமைப்பதன்மூலம், கிரிக்கெட் வீரர்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள் அனைத்தையும் வெளிக்கொணரமுடியும் என்று அவர் நம்புகின்றார். அவுஸ்திரேலிய அணியின் பலம் பற்றிக் குறிப்பிடும்போது, கிரிக்கெட் அக்கடமி மற்றும் முதற்தரக் கிரிக்கெட்டின் ஊடாக வெளிவரும் வீரன் சர்வதேச தரத்துடன் வெளிவருவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

1992 இல் பாகிஸ்தான் உலகக்கிண்ணத்தை வெற்றி கொண்டபோது, அதன் தலைவர் இம்ரான்கான் பத்து வருடகாலத்தில் முதற்சுற்றிலேயே தடுமாறும் நிலைக்கு வந்ததை இவர் ரசித்திருக்கவே முடியாது. அதனால்தான் வேலைப்பளு அதிகம். ஆனால், கிரிக்கெட் துறையிலும கவனம் செலுத்தப்போகிறேன் என்று அறிவித்துள்ளார்.

இம்ரானின் கிரிக்கெட் தொடர்பான கருத்துக்களுக்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் வட்டாரங்களில் ஏகப்பட்ட வரவேற்பு இருப்பது தெரிகிறது. PCB இன் அதிகாரிகளுள் ஒருவரான றமீஸ்ராஜா கருத்துக்கூறும்போது, இம்ரான் போன்ற ஒருவர் எங்கள் சபையில் இருப்பது எவ்வளவு அதிர்ஷ்டமானது என்று கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தவகையில், பாகிஸ்தான் அணியின் வளர்ச்சி மிகவேகமானதாக இருக்கப்போகின்றது என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது. ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் விளையாடும் அணியின் மெருகு இன்மை நன்குதெரியும்.

பாகிஸ்தான் அணியில் இருக்கவேண்டிய ஒரு இளையவர் நீண்ட காலமாக இல்லையே என்ற மனத்துன்பம் ஒன்றிருந்தது. அவர்தான் அற்புதமான களத்தடுப்பைச் செய்து, வெட்கப்பட்டு நிற்கும் இம்ரான் நசீர். இங்கிலாந்து அணியில் அவர் உண்டு. அதேவேளை, அப்துல் ரசாக் OUT. அசார் மெஹ்முட் IN. அக்தாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இன்சமாமுக்குக் கதவுகள் சாத்தப்பட்டுவிட்டன. இவற்றைப் பார்க்கும்போது, பாகிஸ்தான் தெரிவுக் குழுவினர் சரியானதொரு திட்டமிடலின்கீழ், நீண்டதூர நோக்கில் அணியை நிலைநிறுத்த முயற்சிப்பதைக் காணமுடிகிறது. இந்த அணி - இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகளுக்கு இனிப்பானதொரு அணியாக இருக்கப்போவதில்லை.

~ ஜோசப் கிருஷ்ணா ~

# துன்பங்கள் "JOKE" அல்ல

அவுஸ்திரேலிய அணிக்குத் தேவை ஓய்வு. இதுபற்றி அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் தீவிரமாகவே சிந்தித்து வந்திருக்கிறது. மேற்கிந்திய சுற்றுப்பயணம் முடிய ஜூலை, ஓகஸ்டில் அவுஸ்திரேலியாவில் பங்களாதேஷ் அணியைச் சந்திக்க இருக்கிறார்கள் அவுஸ்திரேலிய அணியினர். அதன் பின் ஓகஸ்ட், செப்ரெம்பரில் மொறோக்கோவில் நடைபெறவுள்ளது ஒருநாள் தொடர். இந்தத் தொடரில் அவுஸ்திரேலியா



கலந்துகொள்ளப் போவதில்லை என்று தற்போது அறிவித்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாகக் காட்டப்படுவது - 2002 ஓகஸ்டில் ASHES முக்கோணத்தொடர், உலகக் கிண்ணப் போட்டிகள், மேற்கிந்தியத்தொடர், வரப்போகும் பங்காளதேஷ் தொடர் என்று ஓய்வு ஒழிச்சலில்லாமல் கிரிக்கெட் விளையாட முடியாது என்பதுதான். இது நியாயமானதுதான். கிரிக்கெட் வீரர்களுக்கும் அது தொழிலாக இருந்தாலும், அதற்கப்பால் ஒரு வாழ்க்கை இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அவுஸ்திரேலிய அணியினர் அதற்கு விதிவிலக்கா இருக்கமுடியாதல்லவா. எனவே, அவர்கள் மறுப்பதிலுள்ள நியாயம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. இதேவேளை, அந்த நியாயத்தை மேலும் உறுதிப்படுத்துவதுபோல மொறோக்கோவில் சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன. அண்மையில் மொறோக்கோவின் கஸாப்ளங்கா நகரில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களினால் 43 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக தொடர் விளையாட்டு, களைப்புடன் கூடியதான பாதுகாப்பு அச்சம் ஒன்றும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் அவுஸ்திரேலிய வீரர்கள் தம்மால் மொறோக்கோ பயணத்தை மேற்கொள்ள முடியாது என்று ABC இடம் கூறியதில் நியாயம் இல்லை என்று கூறிவிடமுடியாது. ஆனால், ஆபிரிக்காவின் வட பாகத்திலும் கிரிக்கெட் வளரக்கூடிய ஆரோக்கிய நிலைமைகளில் பாதிப்பு ஏற்படுவதைப் பரிதாபத்துடன் ரசிகர்கள்



பிக்கல் ~ சைமன்

பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான் கவலை. சிம்பாப்வேக்குப் போகமாட்டோம், கென்யாவுக்குப் போகமாட்டோம், பாகிஸ்தானுக்குப் போகமாட்டோம், அவர்கள் வராவிட்டால் நாங்கள் இந்தியாவுக்குப் போகமாட்டோம் என இந்தப் போகமாட்டோம் குரல்கள் எல்லாம் கிரிக்கெட்டின் துரதிர்ஷ் டமாக அமைவதுதான் ஜீரணிக்கப்பட முடியாதது. இறுதியாக ஒன்று மொறோக்கோ போல் ஆபிரிக்கா எங்கும் குண்டுவெடித்தால, ஆபிரிக்காப் பக்கமே போகாமல் இருக்கலாம் என்று ரிக்கி பொன்டிங் JOKE அடிக்காமல் இருந்தால் சரி.

நிர்மலன்

# சபிக்கப்பட்ட அஜய் ஜடேஜா

இந்தியா - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்குச் சிலவேளை ஒரு சாரார் பற்றிய அதிருப்தி சூடேற்றும். அதுதான் தத்தமது மத்திய வரிசை, துடுப்பாட்ட வரிசை தோல்விக்குக் காரணமாக அமைவது. மத்திய வரிசை நான்கு, ஐந்து பேர்களைக் கொண்டிருப்பதால், யாருக்கென்றில்லாமல் பொதுவாகத் திட்டித்தீர்க்க, பாவம் அவர்களும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த மத்திய வரிசையில் நட்சத்திரமாகப் பிரகா சித்தவர்தான் இந்திய ஒருநாள் ஹீரோ அஜய் ஜடேஜா. இவர் பற்றிய செய்திகள் மகிழ்ச்சிகரமானதாக மீண்டும் வெளிவந்துள்ளன.



ஜடேஜா

சிலவருடங்களுக்கு முன்னர், ஆட்டநிர்ணயச் சதியின் தொடர்பில் சர்வதேசக் கிரிக்கெட் உலகமொரு கலங்குக் கலங்கி நின்றது. அந்தவகையில் இந்திய வீரர் கள் - மொகமட் அசாருதீன், அஜே ஷர்மா, மனோஜ் பிரபாகர், அஜய் ஜடேஜா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால், மூன்று வருடங்கள் கடந்த நிலையில் அப்பீல் நீதிமன்றம் இவர் மீதான தடையை நீக்கியுள்ளது. இதன் காரணமாக, உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் உரிமையை ஜடேஜா மீண்டும் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஒருநாள் ஆட்டங்களுக்கென்றே தெரிவுசெய்யப்பட்ட ஜடேஜா ஒருநாள் அணித்தலைவராக இருந்தவர். இந்தியாவிற்காக 196 ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர். ஒருநாள் போட்டிகளில் ஆறு சதங்கள் தன் கணக்கில் வைத்திருப்பவர். டெஸ்ட் ஆட்டங்களிலும் விளையாடியுள்ள இவர் ஆகக்கூடுதலாக மேற்கிந்தியாவிற்கு எதிராக 96 ஓட்டங்கள் பெற்றவர். 1971 இல் பிறந்த இவர், 1992 இல் சர்வதேசக் கிரிக்கெட் உலகில் பிரவேசித்தார். இவர் மைதானத்தில் மிகுந்த கலகலப்பாகக் காணப்படுவர். எல்லோருடனும் நட்புணர்வைக் காட்டுபவர். மேலும், இந்திய இராஜ பரம்பரையொன்றில் வந்த கோடீஸ்வரர். அத்தோடு, சிலகாலம் சினிமாவில் நடித்தாலென்ன என்று சிந்திக்கும் அளவிற்குக் கவர்ச்சிகரமான தோற்றம்கொண்டவர். இவர் சாச்சைகளில் சிக்கிக்கொண்ட தென்பது துரதிர்ஷடவசமானது. இவர் இன்னமும் ஒருசில சட்டரீதியான தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது உண்மையே. அவற்றிலும், வெற்றிகண்டால் உள்ளூர் கிரிக்கெட்டின் ஊடாக இந்திய அணிக்குள் மீண்டும் இடம்பிடிக்க நிச்சயம் முயல்வார். அப்படியாக ஜடேஜா மீணடும் இந்திய அணிக்குள் திறமை என்ற அடிப்படையில் மட்டும் போட்டி போடுவாராயின், தற்போதைய பலரைப் பின்தள்ளி ஜடேஜா முன்செல்வார் என்பது உண்மை. அதற்கு எல்லாக் கிரகங்களும் ஒரே நேர்கோட்டில் வரவேண்டும். எது எப்படியாயினும், அஜய் ஜடேஜா மறக்கமுடியாத ஒரு கிரிக்கெட் வீரர் என்பது மட்டும் மறுக்கமுடியாது.

நர்மதா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## சொந்தவீடும் சுமுகவாழ்வும் !

உயர்பாதுகாப்பு வலயங்களென்ற போர்வையில்- தமிழ் மக்கள் பாரம்பரியமாக வேரோடி வாழ்ந்த மண்ணிலிருந்து அவர்களை விரட்டியடித்து ஆக்கிரமித்து நிற்கும் படையினரின் - எல்லைமீறிய கொடுஞ்செயலைக் கண்டித்தும்,

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது அவலவாழ்வைத் தொலைத்து - தமது சொந்தமண்ணில், சொந்த வீடுகளில், தமக்குரிய வாழ்வமைப்புடன் - இயல்பான, சுமுகமான, நிம்மதியான வாழ்வைத் தேடிநிற்பதை சர்வதேசமெங்கும் வெளிப்படுத்தவும் - யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் மக்கள் எழுச்சி இயக்கமொன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

தமிழினம் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாக - தமிழ் மக்களை, அவர்களது வாழ்விடங்களிலிருந்து துரத்தியடித்து - அவற்றை இராணுவ வலயங்களாக்கி வைத்திருக்கும் பெரும் மனித உரிமை மீறலைச் செய்துகொண்டு - தமது இராணுவ நலன்களை முன்னிறுத்தியவாறு - அடாத்தும், பிடிவாதமுமாக உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு மறுத்துவரும் படைத்தரப்பின் மனிதநேயமற்ற செயலை உலகிற்கு எடுத்துச்சொல்ல, இந்த எழுச்சி இயக்கம் துணைசெய்யும்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று மட்டுமல்ல - யாழ். குடாநாட்டில், பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயும் இராணுவத்தினர் - மக்களது குடிமனைகள், பொதுக்கட்டடங்கள் என ஆக்கிரமித்துள்ள நிலையில் - குடாநாட்டு மக்கள்- படையினரும், படைமுகாம்களும் சூழ்ந்து கொண்டுள்ள - ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையில் வாழ்வதாகவே உணர்கின்றனர்.

மக்களது வாழ்விடங்கள் மட்டுமல்ல - பொது இடங்கள், மக்களது பயன்பாட்டுக்குரிய பிரதேசங்கள், வழிபாட்டிடங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள் என நீக்கமற நிறைந்திருப்பதாக - படைமுகாம்களின் நாடாக, யாழ்.குடாநாடு சிக்கியிருக்கின்றது.

அண்மையில் - குடாநாட்டிற்கு வந்த ஜேர்மனியத் தொழிற்சங்கத் தலைவரொருவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் - இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு விட்டதாகவும், போரின் சத்தங்கள் ஓய்ந்து விட்டதாகவும் சர்வதேச அளவில் கூறப்பட்டாலும் - யாழ்ப்பாணத்திற்குள் நுழைவதற்காக முகமாலைப் பகுதியில் காத்துநின்றதிலிருந்து யாழ்.நகரின் மூலை முடுக்குகள் வரை இராணுவத்தினரின் தலைகளையே கண்டதாகவும், இது தமக்குக் கூறப்படும் சமாதானத்திற்கும் நிஜத்திற்குமான வேறுபாட்டையே உணர்த்தியதாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவர் மட்டுமல்ல, யாழ்.குடாநாட்டில் சமாதானத்தின் விளைவுகளைத் தேடும் எவரும் - படைமுகாம்களின் பிரசன்னங்களையும், இராணுவக் காவலரண்களையும் சந்திக்குச்சந்தி காணுமிடத்து - அமைதியின் பெறுபேறுகள் பற்றி வியப்பே கொள்வர்.

இந்தவகையில் - யாழ்.குடாநாடு இன்னமும் இராணுவச் சூழலுக்குள்ளிருந்து வெளிவராத நிலையே காணப்படுமிடத்து - புதியதொரு அச்சுறுத்தலாக - 'முகாம்களை இடமாற்றுதல்' என்னும் பெயரில் இராணுவ முகாம்களை புதிய இடங்களிலும் ஸ்தாபித்துக் கொள்ளும் ஆபத்தையும் பரவலாகவே யாழ்.மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

கடந்த சில நாட்களில் - யாழ்.நகரிலும், கொழும்புத்துறையிலும், புத்தூரிலும் இன்று வல்வெட்டித்துறையிலுமாக புதிய முகாம்களை அமைப்பதற்கான முயற்சிகளில் படையினர் இறங்கியிருப்பதும், அதனை எதிர்த்து மக்கள் அணிதிரண்டு போராடுவதும் நாளாந்தச் செய்திகளாகிவிட்டன.

இதேவேளை -

பருத்தித்துறை - தும்பளை வீதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவருக்குச் சொந்தமான காணியில் முகாம் அமைக்க முற்பட்ட படையினர் பற்றி, அவர் கண்காணிப்புக்குழுவுக்குப் புகாரீட்டிருக்கின்றார்.

படையினர், தனது காணியை விட்டு வெளியேறி, அக்காணியைத் தான் பயன்படுத்த வழிசெய்யுமாறு - கண்காணிப்புக்குழுவிடம் அப்பொதுமகன் கேட்டிருக்கின்றார்.

இது - தனியே அந்தப் பொதுமகனுக்கு மட்டும் நேர்ந்துவிட்ட கதியல்ல. இவரைப்போல - ஆயிரமாயிரம் மக்களின் குடிமனைகள், காணிகள் யாவுமே - இன்று உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள்ளும், அதற்கு வெளியேயும் - படைமுகாம்களாகவும், காவலரண்களாகவும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் துயரம் - அமைதியும், சமாதானமும் கூடிவரும் வேளையில் இனியும் தொடர்கதையாகி விடக்கூடாதென்பதே தமிழ் மக்கள் அனைவரதும் உள்ளக்கிடக்கையாகும்.

எனவே - இத்துயரத்தைக் களையவும் - தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது வீடுகளில் குடியமர்ந்து தமது அன்றாட வாழ்வுக்குத் திரும்பி - அமைதியான வாழ்வு நிலைபெறவும் ஒன்றுசேர்ந்து குரல்கொடுக்க வேண்டும். இந்தக்குரல் - சர்வதேசத்தின் கண்களைத் திறக்க வேண்டும். அதற்கு - பல்கலைக்கழக மாணவர்களின் மக்கள் எழுச்சி இயக்கம் வழிகோலட்டும்.

# விடுதலைப்புலிகளுடன் பேசவிரும்புவதாக மகேஸ்வரனிடம் சந்திரிகா கூறவில்லை!

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த விருப்பம் கொண்டிருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா தம்மிடம் தெரிவித்ததாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்த கருத்தை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக - ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிப்பதாவது,

புலிகளுடன் இப்போது பேச்சு நடத்தும் திட்டம் எதையும் ஜனாதிபதி சந்திரிகா கொண்டிருக்கவில்லை. புலிகளுடன் பேச ஜனாதிபதி விரும்புவதாக வெளியான செய்திகள் தவறானவை.

அமைச்சர் மகேஸ்வரனுடனான சந்திப்பில் ஜனாதிபதி, நாட்டு நலனை முன்னிட்டு புலிகளுடன் பேசலாம் என்ற கொள்கையுடன் இருப்பதாகவே கூறினார். ஆனால், புலிகளுடன் உடனடியாகப் பேசும் திட்டம் எதுவுமில்லை. அதற்கு கால எல்லை குறிக்கப்படவும் இல்லை.

அத்துடன், புலிகளுடன் பேச அமைச்சர் மகேஸ்வரன் மூலம் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அமைச்சர் மகேஸ்வரனுடனான சந்திப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும், மீள்குடியமர்வு, அரசியல் கைதிகள் விடுவிப்பு குறித்துமே பேசப்பட்டது என்றும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## திட்டமிட்ட கொலைகளை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு அமைப்பு!

திட்டமிட்ட கொலைகள் மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான விசேட பொலிஸ் பிரிவு, நேற்றுமுன்தினம் முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

திட்டமிட்ட கொலைகள், பயங்கரக் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மற்றும் அவற்றுடன் தொடர்புடையோரைப் பிடிக்கவே, இந்த விசேட பொலிஸ் பிரிவு செயற்படவுள்ளது.

நன்கு பயிற்சிபெற்ற பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட இந்தக் குழு - இளம் குற்றவாளிகளை அடையாளம் காணும் முயற்சியிலும் ஈடுபடவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

# வட - கிழக்கு மகளிர் அமைப்புகளின் 'சங்கமம்' நிகழ்வு மன்னாரில் ஆரம்பம்!

(மன்னார்)

வடக்கு - கிழக்கு மகளிர் அமைப்புக்கள் கலந்துகொண்ட மாபெரும் மகளிர் சங்கமம் நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் நகரமண்டபத்தில் ஆரம்பமானது.

பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மூன்று நாள் நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வு, மன்னார் மாவட்ட மகளிர் ஒன்றியத் தலைவி ஜெ.சி அரியரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.அமிர்தாப் ஏற்றிவைக்க, தேசியக்கொடியை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை - மாவீரர் 2 ஆவது லெப்ரினன்ட் மாலதியின் தந்தையார் அ.பேதுரு ஏற்றினார். தொடர்ந்து மகளிர் சங்கமம் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தமிழர் தாயகப் பகுதியிலிருந்து பெருமளவு மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## புலோலியில் இன்று மென்பந்து கிரிக்கெட்!

(வடமராட்சி)

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

தலைவர் ஏ.சுதாபரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் மன்றத் தலைவர் ரி.கதிர்காமநாதன் பிரதம விருந்தினராகவும், சிறபபு விருந்தினராக உதவி அரச அதிபர் தலைமைக் காரியாலயத்தை சேர்ந்த வி.வீரபத்திரபிள்ளையும், பழையமாணவர் மன்றச் செயலாளர் வ.செல்வராசன், ஆசிரியர் ரி.ஜெயவீரசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்தப் போட்டியின் இறுதிப்போட்டியில், தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி 'ஸ்பேர்ஸ்' விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## மந்திகை மருத்துவமனையில் அபிவிருத்திக்குழு அமைப்பு

மந்திகை மருத்துவமனையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வைத்தியசாலை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்திணைக்களத்தின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக் குழுவின் தலைவராக மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை, உபதலைவராக வே.சோனாதிராசா, செயலாளராக சி.சின்னத்தம்பி, உபசெயலாளராக சு.திருச்செல்வநாயம், பொருளாளராக வ.செல்வராசா ஆகியோரும் மூன்று நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சுன்னாகம் மத்திய சந்தையில் போதிய வசதிகள் இல்லை!

### பிரதேச சபையில் வியாபாரிகள் முறைப்பாடு

(உடுவில்)

சுன்னாகம் மத்திய சந்தையில் பல குறைபாடுகள் இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு போதிய இடவசதிகளினமையால் தற்காலிகக் கூடாரங்கள் அமைத்து வியாபாரம் செய்துவருகிறார்கள். அருகிலுள்ள மீன்சந்தையில் உள்ள கழிவுகள் உரியமுறையில் அப்புறப்படுத்தப்படாமையினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

இதேவேளை, சந்தைக்குவரும் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களினதும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைப் பாதுகாப்பதற்கும் போதிய இடவசதிகளும் இல்லை. தம்மிடம் அறவிடப்படும் வரிப்பணத்திலிருந்து தமக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதருமாறு வியாபாரிகள் சுன்னாகம் உப அலுவலகத்தைக் கேட்டுள்ளனர்.

## பருத்தித்துறை 'லீக்' ஏற்பாட்டில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட 'லீக்' நடாத்தும் சிறப்பு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாதம் ஆரம்பமாகவுள்ளது.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய 'லீக்'களில் அங்கம்வகிக்கும் சுமார் 50 கழகங்கள் இதில் பங்குபற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு, பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், அப்பகுதி உதைபந்தாட்ட 'லீக்' செயலாளரிடம் இருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிகள் அனைத்தும் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகிலுள்ள நியூட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

## யாழ்.நகரப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

யாழ்.நகரப் பகுதியில் துவிச்சக்கரவண்டித் திருடர்கள் அதிகரித்துள்ளதாகவும், அனைவரையும் விழிப்பாக இருக்குமாறும் யாழ்.குற்றத்தடுப்புப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களில் மட்டும் யாழ்.நகரப்பகுதியில் பல்வேறு இடங்களிலும் பெரும் எண்ணிக்கையான களவுகள் நடைபெற்றுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

யாழ் - கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் - திருடர்கள் அதிகரித்துள்ளதாகவும், துவிச்சக்கர வண்டிகள் அனைத்தையும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பிடத்திலேயே விடுமாறும் வெளியிடங்களில் நிறுத்த வேண்டாம் என்றும் பொலிஸார் கேட்டுள்ளனர். (சு)

# தீயவர் மூட்டிய தீயினில் எரிந்த எங்கள் நூலகம்

பொது நூலகங்கள், அரும் பொருட்காட்சியகம், கலைக்கூடங்கள் என்பவை ஒரு மக்கள் சமூகத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களின் பரிணாமவளர்ச்சியையே பிரதிபிம்பப்படுத்தி நிற்கின்றன. ஒரு நாட்டின்மீது, இன்னொரு நாடு தனது ஆக்கிரமிப்பு, விஸ்தரிப்பு நோக்கங்களுக்காக அரக்கக் கரங்களை அகலவிரிக்கும்போது, ஆக்கிரமிப்பாளர்கள் தனது ஆக்கிரமிப்பின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக - ஆக்கிரமிக்கப்படும் நாட்டு மக்களது அல்லது இனக் குழுமத்தினது கலை, பண்பாட்டு, கலாசார விழுமியங்களையும், கலைப் பொருட்களையும் அழித்து விடுவது வழக்கமாகும்.

அலெக்சாந்திரியா மீது படையெடுத்த, மிலேச்சர்கள் நூல் நிலையங்களை அழித்ததாக வரலாறு கூறுகின்றது. இந்தியாவின் முகலாய படையெடுப்பின்போது, சரஸ்வதி மஹாலின் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அண்மையில் ஈராக் மீது படையெடுத்த, அமெரிக்கப் படைகள் பக்தாத்திலுள்ள பல நூற்றாண்டுகால பழமைவாய்ந்த மொசப்பத்தேமிய காலத்து நாகரிக சின்னங்களையும், கலைப் பொருட்களையும் சூறையாடியதோடு, சிதைத்து அழித்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வரலாற்று நிகழ்வுகள் தற்செயலானவையல்ல. அவை ஆக்கிரமிப்பாளர்களது மனவிகாரங்களையே பிரதிபலிக்கின்றன.

**அபிவிருத்தி சபை தேர்தலும் நூலக எரிப்பும்**

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலுக்காக, யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் குவிக்கப்பட்டிருந்த சிங்களமொழி பேசும் பொலிஸார், தேர்தலுக்கு முன்னரேயே பல அழிப்புவேலைகளை- யாழ்ப்பாணத்தில் 1981 மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளலாயினர்.

நாச்சிமார் கோயில் தேர் எரிப்பு, யாழ். பிரதான வீதியில் அமைந்திருந்த கூட்டணித் தலைமைச் செயலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், அப்போதைய யாழ்ப்



பாண எம்.பி. யோகேஸ்வரனின இல்லம் என்பனவற்றை அக்கினியுடன்

**யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 22 ஆண்டுகளாகின்றன.**

சங்கமமாக்கிய பொலிஸார், யாழ். மாநகரசபையின் பொதுநூலகத்தையும், 93000 நூல்களோடு எரித்துச் சாம்பலாக்கினர். யாழ்ப்பாண நூல் நிலையம் எரிவதை நேரில் பார்த்த மொழியியல் அறிஞர் தாவீது அடிகள் மாரடைப்பால் மரணமடைந்தார். யாழ்ப்பாணம் சோகமயமானது.

**லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு**

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் நாலாம் திகதிவரை சிங்களப் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு, முன்னாள் யாழ். அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ தலைமையிலான விசாரணைக்குழு, யாழ்.நூலகப் புனரமைப்புக்காக ஒன்றரைக்கோடி ரூபாவை அரசாங்கம் வழங்கவேண்டுமெனப் பரிந்துரைசெய்தது. இக்குழு சிபாரிசுசெய்த நட்டஈட்டுத் தொகை முழுமையாக வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாண நூலக எரிப்புக்கு அக்கால கட்டத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் சென்று, சுபாஷ் ஹோட்டலில் தங்கியிருந்த அப்போதைய அமைச்சர் காமினி திஸநாயக்கவும், சிறில் மத்தியூவும்தான் காரணம் என, 1991 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா ஒருமுறை குறிப்பிட்டார்.

இது மட்டுமல்ல - ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசு யாழ்ப்பாணம் நூலக எரிப்புக்கு தலைமைதாங்கிய பொலிஸ் அதிகாரிக்கு லேக் ஹவுஸ் நிறுவனத்தில் உயர்பதவியொன்றைக் கொழுத்த சம்பளத்தோடு வழங்கிக் கௌரவித்தது. இது வரலாறு.

**1994 ஆம் ஆண்டு தேர்தலின் போது...**

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, சந்திரிகா அம்மையாருக்குப் போட்டியாக காமினி திஸநாயக்கவை யு.என்.பி. தேர்தலில் போட்டியிட வைத்தது, காமினி திஸநாயக்கவுக்கு எதிரான தேர்தல் பிரசாரத்தின்போது, சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாண நூல் நிலைய எரிப்பு விடயத்தை, முக்கியமான விடயமாக முன்னெடுத்தார். இதற்காகச் செங்கல்லும், புத்தகமும் சேகரிக்கும் "தவலகம" என்ற இயக்கத்தை உருவாக்கினார். சேரிக்கப்பட்ட செங்கல்லுக்கும், புத்தகத்துக்கும் தேர்தல் முடிந்த பின்னர், என்ன நடந்தது என்பது இது வரை தெரியாது. இதுவும் வரலாறு.

**மேலும் பல நூல்கள் எரிக்கப்பட்டன.**

யாழ்ப்பாண நூல்நிலைய எரிப்பைத் தொடர்ந்து, சிவில் யுத்தத்தை சிறிலங்கா அரசு தீவிரப்படுத்தியது. இதன்போது பல நூலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மிகப் பழமைபெற்ற ஹாட்லி கல்லூரி நூல்நிலையமும் 1985 ஆம் ஆண்டு அரியாலை சரஸ்வதி நூலகமும், 1986 ஆம் ஆண்டு காரைநகர் குளோப் நூலகமும், 1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட "ஒப்ரேசன் லிபரேசன்" இராணுவ நடவடிக்கையின்போது - திக்கம், பொலிகண்டி போன்ற இடங்களில் பல நூலகங்களும் எரிக்கப்பட்டன.

1988 - 1989 ஆம் ஆண்டு கால கட்டத்தில், இந்திய இராணுவம் மேற்கொண்ட பல இராணுவ நடவடிக்கைகளின்போதும் - பல நூலகங்கள் வடக்கு - கிழக்கில் எரிக்கப்பட்டன.

1990 களில் பிரேமதாசா அரசும், அவரது இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ணாவும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது, தீவகம் உட்பட பல இடங்களில் பெருமளவு சிறுசிறு வாசகசாலைகள் சிதைக்கப்பட்டன, அழிக்கப்பட்டன.

சர்வதேச சமூகவிரோதியாக வரலாற்றில் வர்ணிக்கப்படும் ஹிட்லர் வேறு இனங்களின் பண்பாட்டைப் பேணுவதில் எவ்வளவு அக்கறையாக இருந்தான் என்பதை வரலாறு பதிவாக்கியுள்ளது. ஹிட்லரும் சேர்ச்சிலும் புரிந்துகொண்ட விடயங்களை - அமெரிக்க ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாதி ஜோர்ஜ் புஷ்ஷும் பேரினவாதி ஜே.ஆரும் புரிந்து கொள்ளத் தவறியதை வரலாறு சுட்டிக் காட்டத்தவறவில்லை. வரலாற்றுச் சக்கரம் சுற்றிச் சுழலும்போது இதையிட்டுச் சிரித்துக் கொள்ளும்.

**பொன்.பூலோகசிங்கம்**

# சிதைக்கப்பட்ட நூலகத்தின் நினைவுகள் இன்னும் மனதைவிட்டு மறையவில்லை!

**பொது நூலக எரிப்புத் தொடர்பாக நமது ஈழநாட்டுடன் பொதுமக்கள் சிலர் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இவை.**

**சிவநாதன்**
**பொருளியற்துறைத் தலைவர்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

எரிந்த பொது நூல நிலையத்தை அதேஇடத்தில் திரும்பவும் கட்டியிருக்கக் கூடாது. புதியதொரு இடத்தில்



கட்டியிருக்க வேணும. யாழ்ப்பாணம் அழிந்தது என்பதற்கு எந்தவொரு தடயமும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இது அவசரப்பட்டுக் கட்டப்பட்டது. யாழ்ப்பாணத்து ஆட்கள் படித்தவர்கள் என்றொரு மதிப்பீடு ஆரம்ப காலந் தொட்டு இருக்கிறது. அதுவும் பொது நூல்நிலையம் எரிந்தது என்பதையும், யாரால் எரிக்கப்பட்டது என்பதையும் திருப்பித் திருப்பிக் காட்ட அரசியல் சக்திகள் விரும்பவில்லை. அந்தவகையில் - அதை மூடி மறைப்பதற்காகவே, . அவசர அவசரமாக புனரமைப்புச் செய்யப்பட்டது.

எங்களைப் பொறுத்தளவில்- எங்களுக்கு இது எரிந்ததும் தெரியும், புதிதாகக் கட்டப்பட்டதும் தெரியும். ஆனால், இப்ப இருக்கிற பிள்ளைகளுக்கு அது தெரியாது. புதிதாகக் கட்டும்போது- அரசியலிருந்து விலகி, பொதுமக்களிடம் இருந்து கருத்தும் கேட்டிருக்க வேண்டும்.

எல்லாம் அரசியல் பலத்தால் மூடி மறைப்பதற்காக - பலமில்லாத, அதாவது உறுதித்தன்மையற்ற கட்டடத்தை மேலால் பூசி வைத்திருக்கிறார்கள். காலம்காலமாக நமது சந்ததிகள் பாவிக்கவேண்டிய இக்கட்டடம் ஒருகாலத்தில் எத்தனையோ பேரைப் பலிகொள்ளும் நிலைக்குவரும். ஏனெனில், அதிர்வுகளால் உறுதியிழந்த கட்டடம் அப்படியே மெருகூட்டப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் பெரியதொரு நூல்நிலையம் வேண்டும் என்பதில் எந்தவொரு கருத்து வேறுபாடும் இல்லை. நிறைய அன்பளிப்புப் புத்தகங்கள் கிடைக்கும். அதைப்பேண வேண்டும். அதனால், எரிந்த கட்டடத்தையும் வைத்துக்கொண்டு புதிய ஒரு இடத்தில் இதை மீளவும் கட்டியிருக்க வேண்டும். புதிதாக ஒரு நூல் நிலையம் கட்டினால், புதியதொரு அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டது மாதிரியும் இருந்திருக்கும்.

**மீனாம்பாள் முத்தையா**
**3 ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

1981 மே 31 அன்று பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டது. இந்த நூல்நிலையம் இயங்கிக்கொண்டிருக்கும்



போது,எங்கட றோட்டே மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். அப்பிடிச் சனக்கூட்டம் நிரம்பி வழியும். பல முதியவர்கள் கூட அங்க பின்னேரத்தில் ஒரு கூட்டம் கூடுவினம். அப்பிடித்தான் இந்த நூல் நிலையம் மற்றும் சுற்றுப்புறமும் இருந்தது.

எனது பிள்ளைகள் இப்ப நல்ல உயர்பதவிகளில் இருக்கிறார்கள். அவர்களுடைய உயர்வுக்கு உறுதுணையாய் இருந்தது இந்த நூல் நிலையம்தான். அந்தளவுக்குத் தேவையான அத்தனை புத்தகமும் இங்க இருந்தது. நூல்நிலையம் எரிச்ச மறுநாள் சின்னப்பிள்ளைகள் கூட இதால நிறையப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு போனார்கள். பெறுமதிவாய்ந்த பல புத்தகங்களை அதன் பயன்பாடு விளங்காதவர்கள் எடுத்துக் கொண்டு போனார்கள்.

இந்த நூல்நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுத் தமிழ்ச் சமூகத்தின் கல்விக்கு உதவவேண்டும் என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கிறம்.

**செல்வி. ராஜநாயகம்**
**ஆசிரியை.**

ஐ.தே.கட்சி அரசு ஆட்சிக் காலத்தில் தமிழ்ச் சனங்களுக்கு பிரச்சினை ஏற்பட்டது என்பது ஒரு சாதாரண விடயம்தான். ஆனால், அது இந்தளவுக்குத் தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தை அழிக்கும் அளவுக்கு அமைந்தது மிகவும் கவலையைத் தந்தது. பொது நூல் நிலையம் மட்டுமல்ல, பல கடைகளும், வீடுகளும் எரிக்கப்பட்டன. நாங்களும் பயந்துகொண்டுதான் வீட்டில் இருந்தனாங்கள். பொதுநூல் நிலையம் எரிந்ததை நான் கண்ணால் பார்த்தேன். அது இன்றும் மறையவில்லை, மறைக்கவும் முடியாது. ஏனெனில், நான் எத்தனையோ புத்தகங்களை அங்க எடுத்துப் படித்துப் பயன்பெற்றிருக்கிறன்.

அந்த நேரம் இங்க இருந்த அரசியல்வாதிகளும் கையாலாகாதவர்களாக இருந்தார்கள். பொது நூல் நிலைய எரிப்புத் தமிழ் சமூகத்தின் கல்விச் செயற்பாட்டில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**பூபாலசிங்கம்**
**ஓய்வுபெற்ற பொறியியலாளர்,**
**2 ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**



1981 ஆம் ஆண்டு தான் இந்தப் பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டது. நாங்கள் வீட்டுக்குள்ள இருக்கேக்க கூக்குரல் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. அப்ப நாங்கள் வெளியில வந்துநின்று பார்த்தால் நூல் நிலையம் எரிகிறது நேரதெரிகிறது. நான் கிட்டப்போகப் பொலிஸ்காரங்கள் மறித்துத் திருப்பி அனுப்பிப்போட்டாங்கள்.

பொது நூல்நிலையம் இயங்கிக் கொண்டிருக்கேக்க ஒரு சுறுசுறுப்பு இருந்தது. நான் பத்திரிகை படிக்க அங்கதான் போவன். அப்பவே நிறைய வயோதிபர்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனப்பலரும் வந்துபோகும் ஒரு சந்தோஷமான இடமாகவே இந்த நூல்நிலையம் இருந்தது.

**சிவப்பிரகாசம்**
**விரிவுரையாளர்,**
**சித்திரமும் வடிவமைப்பும்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



நான் இன்று கலைத்துறையில் இப்படியான ஒரு வளர்ச்சி பெற்றிருப்பதற்கு எனக்குக் குருவாக அமைந்தது இந்தப் பொதுநூலகம்தான். அதை நான் எப்பவும் ஒரு நூலகமாகப் பார்த்தது இல்லை. எனது அறிவின் குருவாகத்தான் பார்த்திருக்கிறேன்.

யாழ்.பொது நூலகத்தோடு என்னுடைய கலைத்துறை வாழ்க்கையும் பின்னிப்பிணைந்திருக்கிறது. பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட போது, அதன் முகப்புப் புறத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த சரஸ்வதி என்னுடைய படைப்பு. நான் அங்குதான் என்னுடைய கலை வளர்ச்சிக்குத் தேவையான புத்தகங்களை எடுத்துப்படித்தேன். அதுமட்டுமல்லாமல், அதற்குச் சிற்பம் செதுக்கிக் கொடுத்ததும், ஓவியம் வரைந்து கொடுத்தது எல்லாம் மறக்கமுடியாதவை.

காலம்காலமாக வரலாற்றோடு பொறிக்கப்பட்டு இருக்கவேண்டிய பொதுநூலகத்தின் முன்பாக, என்னால் வடிவமைக்கப்பட்டிருந்த சரஸ்வதி சிலை சிதைக்கப்பட்டதும், வரையப்பட்ட ஓவியங்கள் அழிக்கப்பட்டதும் என்னுடைய கலைப் பொக்கிஷத்தை அழித்ததுபோல கவலையடையச் செய்தது.

**சிவதாஸன்**
**முன்னாள் ஊழியர்,**
**யாழ்.பொது நூல்நிலையம்.**

1981 இல் யாழ்ப்பாணத்தில் முதலும், கடைசியுமாக நடந்த மாவட்ட சேவைத் தேர்தல்களை நடாத்த இங்கு வந்த இரண்டு அமைச்சர்களான காமினி திஸநாயக்கா, சிறில் மத்யூ ஆகியோர் தெற்கிலிருந்து ஹெலிகளில்



உணவுப் பார்சலுடன் இங்கு கபட நோக்கத்துடன் வந்தனர். இவ்விரு மந்திரிமாரின் பிரசன்னத்துடன்தான் இரவோடிரவாக யாழ். பொது நூலகத்தைத் தீ இட்டு அழித்தார்கள். பொது நூலகம் எரிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனேயே - அருட்தந்தை டேவிட்டின் உயிர் பிரிந்ததென்றால், அதற்கான பொறுப்பு குறுகிய மனப்பான்மை கொண்ட வெறுப்பின் கைதிகளான சிங்கள மந்திரிமாரையும் படையினரையுமே சாரும்.

**நேர்காணல்**
**உஷா, கலானந்தி**

# பிரான்சின் கடைசி கொன்கோட் விமானம்; பரீஸ் விமான நிலையத்தில் பிரியாவிடை!

உலகின் அதிவேகம் கொண்ட பயணிகள் விமானம் என்ற பெருமையை, இதுவரை பேணிவந்த பிரிட்டிஷ் - பிரான்ஸ் கூட்டுத்தயாரிப்பான 'கொன்கோட்' விமானங்களின் கடைசி விமானமும், நேற்றுடன் தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றது. தனது கடைசிப் பயணமாக நியூயோர்க்கிலிருந்து பிரான்ஸ் வந்துசேர்ந்த இந்த விமானம், இனி அரும்பொருட் காட்சியகத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

தனது 27 ஆண்டு சேவையின் நிறைவாக, மூன்றரை மணிநேர பயணத்தை மேற்கொண்டு பரீஸ் வந்த 'கொன்கோட்' விமானத்திற்கு, பரீஸ் விமானநிலையத்தில் - மிகப்பெரும் பிரியாவிடை வைபவம் ஒன்று நடைபெற்றது. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் இடையில் 1976 இல், உருவான வர்த்தக உடன்பாடு ஒன்றின் மூலம் தயாரான இந்த ரக விமானங்களில் பன்னிரண்டு இதுவரை சேவையில் இருந்தன. எனினும் பராமரிப்புச் செலவுகூடிய இந்த விமானங்களை, படிப்படியாக கைவிட இரு நாடுகளும் இவ்வாண்டு ஆரம்பத்தில் முடிவுசெய்தன.

மூன்று வருடங்ளுக்கு முன்பு பரீஸ் விமான நிலையமருகே நடைபெற்ற, மோசமான 'கொன்கோட்' விமான விபத்தில் 113 பயணிகள் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. அதுமுதல், இவ்விமான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

நேற்று, பரீஸ் விமான நிலையத்தில் நடைபெற்ற 'கொன்கோட்' விமான பிரியாவிடை வைபவத்தில், 250 விமான நிலையப் பணியாளர்கள் உட்பட, 2000 பேர் நீண்ட வரிசையில் நின்று விமானத்துக்கு இறுதி மரியாதை சல்யூட் அடித்து விடை கொடுத்தனர்.


ஓய்வுபெற்ற 'கொன்கோட்'

## ஒலிம்பிக்கில் குண்டு வைத்த நபர் அமெரிக்காவில் கைது!




1996 அட்லாண்டா ஒலிம்பிக் நடைபெற்றபோது, குண்டுவைத்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை, நீண்ட காலத்தின் பின் அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

எரிக் ருடல்ப் என்ற இந்த நபர், தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் பட்டியலில் உள்ளவரென்றும், நேற்றுக் காலை கரோலினா மாவட்டத்தில் இவர் கைதானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 36 வயதான இவர், முன்னாள் படைவீரர் ஆவார்.

இந்தக் குண்டு வெடிப்பினால், ஒலிம்பிக் பூங்காவில், அந்நேரத்தில் இருந்த ஒரு பெண் பலியானார். நூறு பேர் காயமுற்றனர்.

## பிரிட்டிஷ் படைகளின் கொடூரம்; புகைப்படக் கலையக யுவதி அச்சம்!




ஈராக்கிய படையினரை - போர்க் கைதிகளாகப் பிடித்த பிரிட்டிஷ் படைகள், அவர்களை மனிதாபிமானமற்ற வகையில் நடத்தியபோது, இரகசியமாகச் சக பிரிட்டிஷ் படையினர் சிலரால் அக்காட்சி படமாக்கப்பட்டது. இப்படங்களைக் கழுவியப் புகைப்படக் கலையகத்தைச் சேர்ந்த யுவதியொருவர், அப்புகைப்படங்களை தான் பார்த்தபோது, அச்சம் அடைந்ததாகக் கூறியுள்ளார்.

ஸ்ரபோட்ஷேயரில் உள்ள புகைப்படக் கலையகத்தைச் சேர்ந்த கெலிரெல்போட் என்ற இந்த யுவதி தகவல் வெளியிடுகையில், இப் புகைப்படங்களை நான் கழுவிப் பார்த்தபோது எனக்கு காய்ச்சல் வருவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. அக்காட்சிகள் என்னால் மறக்க முடியாதவை. அவை மிகவும் கொடூரமானவை என்றார் அவர்.

இதேவேளை - இப்புகைப்படங்களை எடுத்த 18 வயதான பிரிட்டிஷ் சிப்பாய், இராணுவப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

"எனது படைவீரர்கள் குறித்து நான் பெருமைப் படுகிறேன். ஆனால், அதேசமயம் இத்தகைய மிருகச் செயல்களை ஏற்கமுடியாது. எனவே, இது குறித்து நான், பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தமை பற்றிக் கவலைப்படவில்லை" என்று ரில்போர்ட் என்ற யுவதி கூறுகிறார்.

## பர்மிய எதிர்க்கட்சி தலைவி மீண்டும் கைது செய்யப்பட்டார்



பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகி, மீண்டும் பர்மிய ராணுவ அரசால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அரச ஆதரவாளர்களுக்கும், இவரின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த கைகலப்பு தொடர்பாகவே இவர் கைதானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இம் மோதலில் நான்கு பேர் பலியாகினர் ஐம்பது பேர் காயமுற்றனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே, சூகி பல ஆண்டு தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். இவரின் கட்சியைச் சேர்ந்த பத்துப் பேருக்கு - கடந்த வாரம் ஊர்வலம் நடத்திய குற்றச்சாட்டில் கடும் சிறைத்தண்டனை பர்மிய ராணுவ அரசால் வழங்கப்பட்டது.

## உலகவலம்

### பேரழிவு ஆயுதங்களை அமெரிக்கா தேடுகிறது

ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்களைத் தேடும் நடவடிக்கையை, மேலும் விரவுபடுத்தப் போவதாக, பென்ரகன் அறிவித்துள்ளது. இதுவரை, இத்தகைய எந்த ஆயுதங்களும் ஈராக்கில் மீட்கப்படவில்லை.



ஈராக்கில் இத்தகைய ஆயுதங்கள் இருப்பதாகக் கூறியே, அந்நாட்டின் மீது படையெடுப்பை மேற்கொண்ட அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன. தவறான தகவல்களின் அடிப்படையில், ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டதாகக் கூறப்படுவதை மறுத்துள்ள அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட், ஈராக்கில் இத்தகைய ஆயுதங்கள் உள்ளன என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஈராக்கில் தொடர்ந்து தனது படைகளை நிலைநிறுத்தி வைக்குமுகமாகவே, அமெரிக்கா இத்தகைய அறிவித்தல்களை விடுப்பதாகக் கூறப்படுகிறது.




ஜீ-8 மாநாட்டில் பங்குபற்றும் உலகின் முக்கியமான தலைவர்கள் எட்டுப்பேரின் முகமூடிகளை அணிந்தவாறு, ஜீ-8 நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.



கனடாவில் மாநாடு ஒன்றில் பங்குபற்றியபோது - 'சார்ஸ்' அச்சுறுத்தலுக்காளான நோயாளி ஒருவருக்கு மருத்துவர்கள் பாதுகாப்புக் கவசங்கள் அணிந்தவாறு சிகிச்சை அளிக்கின்றனர்.



தமது பொம்மைத் துப்பாக்கிகளுடன் போர் விளையாட்டில் ஈடுபடும் ஈராக்கியச் சிறுவர்கள் - பாக்தாத் தெருப்பகுதி ஒன்றில்.

இயற்கையின் சீற்றத்தைத் தணிக்க இயன்றவரை பாடுபடுங்கள்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொது நூலகப் புனரமைப்புக்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ். பொது நூலகத்தின் புனரமைப்புப் பணிகளைப் பூரணப்படுத்துவதற்காக, இருபது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற்படி நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது.

மேற்படி நூலகத்தின் புனரமைப்புப் பணிகளை முழுமையாக நிறைவு செய்யும் நோக்குடன், இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிலையைப் பயன்படுத்திப் புனரமைப்புப் பணிகளை, முழுமையாக பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மிகவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

# துரையப்பா விளையாட்டரங்கு புதுப்பொலிவு பெறுகின்றது!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தேசிய விளையாட்டு விழாவினையொட்டி, துரிதகதியில் புனரமைப்புச்செய்யப்பட்டுவரும் துரையப்பா விளையாட்டரங்கினை, யாழ்.மாநகர சபை ஆணையாளர் நேற்றுப் பார்வையிட்டார்.

இதேவேளை, யாழ்.துரையப்பா விளையாட்டரங்கினைச் சூழ சுற்றுவேலி அமைக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை- விளையாட்டு மைதானத்தின் மேற்குத் திசையில் 'திறந்த பவிலியன்' ஒன்றும் கட்டப்படவுள்ளது.

அத்தோடு, மின்சார வசதியும் துரையப்பா விளையாட்டரங்குக்கு ஏற்படுத்தப்படவிருக்கின்றது. (சு)

## பட்டதாரிகள் நியமனம் 15 ஆம் திகதிவரை அவகாசம்

வடக்கு - கிழக்குக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால், நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், எதிர்வரும் ஜுன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது கடமைகளைப் பொறுப்பேற்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 1000 பட்டதாரிகளுக்கு இந்த ஆண்டு மூன்று கட்டங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

எக்காரணம் கொண்டும், மாகாணக் கல்வி அமைச்சின் அனுமதியின்றி, புதிதாக நியமிக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து வேறு பாடசாலைகளுக்கு இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'யூ.எஸ்.எய்ட்' அதிகாரி அடுத்த வாரம் யாழ். வருகை

(கொழும்பு)

'யூ.எஸ்.எய்ட்' நிறுவனத்தின் உதவி நிர்வாக அதிகாரி பிரட்ரிக் ஷிவிக், அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த அதிகாரி யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு, யாழ்ப்பாணத்திலிருந்தே உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டுக்குச் செல்லவுள்ளார்.

இம்மாதம் நான்காம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கும் இவர், யாழ்ப்பாணத்தில் தமது உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்களை நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளார். (க)

## கண்காணிப்பு...

சந்தித்து தமது கடுமையான கண்டனத்தையும், ஆட்சேபனையையும் நேரடியாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது - மேற்படி சம்பவம் போன்ற - சம்பவங்கள், எதிர்காலத்தில் நடைபெறாமல் தவிர்த்துக் கொள்வதென, கண்காணிப்புக் குழுவினர் உறுதி வழங்கியதாகத் தெரியவருகிறது. (க)

## தேர்தலுக்கு...

கேட்கப்பட்டுள்ளது என்று, தெரிவிக்கப்படுகின்றது.

மதிப்பீட்டில் ஜனாபதிபதியின் செல்வாக்குப் பற்றி எந்தவித தகவலும் கேட்கப்படவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அனுரா பண்டாரநாயக்க, கரு ஜெயசூரிய, விமல் வீரவன்ச, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் தனிப்பட்ட செல்வாக்குப் பற்றி இந்தக் கணிப்பீட்டிலிருந்து தெரிவிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ரணில் ரோக்கியோ...

படுத்தல், பின் தேர்தலுக்கு செல்லுதல், அபிவிருத்தி லொத்தர் சபை வர்த்தமானியைப் பிரசுரிக்காது தடுத்து நிற்கும் அமைச்சருக்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற பல விடயங்களை இந்தச் சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்காக 5 ஆம் திகதி ஜப்பான் சென்று, 11 ஆம் திகதி திரும்புவதற்குள் ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைவதற்கான ஒப்பந்தத்திலும் ஜனாதிபதி கைச்சாத்திடுவர் என்றும் தெரிவிக்கப்படுகினறது.

## கொடூரமான...

தெரிவித்துச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இதனால், அச்சமடைந்த- அவரது குடும்பத்தவர்களும், அயலவர்களும் தேடிச்சென்றவேளை - கரந்தன் சந்திக்கு அண்மையிலுள்ள வீதியில் இவரது மோட்டார் சைக்கிளின் காப்புறுதி மற்றும் வரிப் பத்திரங்கள் இருப்பதைக் கண்டனர். அப்பகுதியில் இரத்தக்கறைகளும், உடைந்த சில பற்துண்டுகளும் காணப்பட்டன. சடலம் கிணற்றடிககு இழுத்துச் செல்லப்பட்ட அடையாளங்களைத் தொடர்ந்து சென்றபோது, கிணற்றில் இவரது சடலமும், மோட்டார் சைக்கிளும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பாக, கோப்பாய் பொலிஸாருக்கு கொடுத்த தகவல்களையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். இவரது உடலின் தலைப்பகுதி மற்றும் ஏனைய அங்கங்களில் - வெட்டுக் காயங்களும், அடிகாயங்களும் காணப்படுவதாக கோப்பாய்ப் பொலீஸார் தெரிவித்தனர். மேற்படி சம்பவம் தொடர்பாக, புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (121)

# விடுதலைப்புலிகளின் செயலில் எந்தவிதத் தவறும் இல்லை!

## ரோக்கியோ பகிஷ்கரிப்பு குறித்து பிரதியமைச்சர்

ரோக்கியோ மாநாட்டில் கிடைக்கின்ற நிதியுதவியில், வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கும் பங்கை உறுதிப்படுத்த வேண்டுமென்று, தமிழீழ விடுதலைப் புலிகள் சிந்தித்துச் செயலாற்றுவதில் எந்தவிதத் தவறுமில்லை.

-இவ்வாறு பிரதியமைச்சர் சேகு தாவூத் குறிப்பிட்டுள்ளார். நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற, மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கு யுத்தமுனையில், இராணுவ ரீதியில் சமபலத்தை சர்வதேச சமூகத்துக்கு நிரூபித்துக் காட்டிய தமிழர் தலைமைத்துவம், இராஜதந்திர ரீதியிலான முயற்சிகளிலும் வெற்றிகளைக் குவிக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மூதூரில் கைதான பொலிஸார் விடுதலைப் புலிகளால் விடுவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் அத்துமீறி நுழைந்த வேளை, கைது செய்யப்பட்ட இரு பொலிஸாரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மூதூர் பகுதியில், அத்துமீறி நுழைந்த - கே.புஸ்பகுமார, காமினி ஹேரத் ஆகிய இரு பொலிஸாரும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பகுதியிலுள்ள சிலருக்கு- நீதிமன்ற அழைப்பாணையைக் கொண்டு சென்றவேளையே, இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக - இவர்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரியவந்தது.

இதன்பின்னர் - நேற்றுக் காலை, மூதூரில் வைத்து உதவிப் பொலிஸ அத்தியட்சகர் டபிள்யூ.எம்.சமரசேகரவிடம் இவர்கள் கையளிக்கப்பட்டனர்.

மேற்படி கைது செய்யப்பட்ட இரு பொலிஸாரிடமிருந்தும் - நேற்று மாலை வாக்குமூலங்கள் பதிவு செயயப்பட்டதாக, திருகோணமலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தெரிவித்தார்.(10)

## வல்வெட்டித்...

இயல்பு வாழ்வில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் என்றும், அப்பகுதியூடான பொது மக்களின் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்படும் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய படைமுகாம் அமைப்பதை படையினர் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கோரியும், படையினரின் மேற்படி அத்துமீறிய செயலைக் கண்டித்துமே இன்று காலை போராட்டம் நடத்தப்படவுள்ளது. (க)

## பெற்ற சிசுவை...

வரும் ஆஜர் செய்யப்பட்டனர். அங்கு அவர்கள் இருவரும் வாக்குமூலம் அளித்தபோது தமது குற்றச்செயலை இருவரும் ஒப்புக்கொண்டனர்.

இவர்கள் இருவருக்கும் - எதிர்வரும் 12 ஆம் திகதிவரை தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. (க)

# பாதாள உலகக் கோஷ்டியை ஒடுக்க விசேட அதிரடிப்படை

பாதாள உலகக்கோஷ்டியினரை ஒடுக்குவதற்காக - விசேட அதிரடிப் படையினரைக் கொழும்பிலும், தெற்குப் பகுதிகளிலும் கடமையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது எதிர்பார்க்கப்படாத நடவடிக்கை என, விபரித்துள்ள உள்துறை அமைச்சகம் - ஆனால், இது காலத்தின் தேவை எனவும் குறிப்பிட்டுள்ளது.

பாதாள உலகக் கோஷ்டியினரைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ள விசேட அதிரடிப் படையினர், வடக்கு - கிழக்கிலுள்ள முகாம்களிலிருந்தும் அழைக்கப்படுவர் என அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இது தொடர்பாக - உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கும்; விசேட அதிரப்படை அதிகாரிகளுக்கு இடையிலான முக்கிய சந்திப்புக்கள், கடந்த சில நாட்களாக கொழும்பில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பையடுத்தே இந்த நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கப்பட்டதாக - உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் தெரிவித்தார்.

கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் பெரியளவிலான 28 பாதாளக் கோஷ்டிகள் இயங்குவதாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் கடிதத்துக்கு...

வான வகையில் விளக்கம் கொடுக்கும் வகையில், அரசு தனது விளக்கக் கடிதத்தை தயாரித்து வருவதாக, அரச தரப்பில் கூறப்படுகிறது.

அரசின் மேற்படி விளக்கக்கடிதம் - அநேகமாக, இவ்வார முற்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படலாமென்று, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக தெரிவித்தார்.

இதேவேளை - இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலான மாற்றுயோசனைகளை நிராகரித்த விடுதலைப் புலிகளின் பதில் கடிதம், கொழும்பை வெள்ளியன்று சென்றடைந்ததும் - நுவரெலியாவுக்குச் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே கொழும்பு திரும்பியதாக பிரதமருக்கு மிக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இந்தக் கடிதம் அலரிமாளிகையை வந்தடைந்ததும் - பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் இதுபற்றி நுவரெலியாவிலிருந்த பிரதமருக்கு உடனடியாகவே அறிவித்தார்.

இதனையடுத்து - பிரதமர் தனது நுவரெலியாப் பயணத்தை இடைநிறுத்திக் கொண்டு ஹெலிகொப்ரர் மூலம் கொழும்பு திரும்பினார்.

அவர், அலரி மாளிகையை வந்தடைந்ததும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தை முழுமையாகப் படித்து - முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து கலந்துரையாடி, புலிகளுக்கு விளக்கக் கடிதத்தை அனுப்பத் தீர்மானித்ததாகவும், விளக்கக் கடிதத்தை வரைவதில் பிரதமர் உடனடியாகவே ஈடுபட்டதாகவும்- அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (200,01)

## மண்டை தீவில் சடலங்கள்

மண்டைதீவுக் கரைப்பகுதியில் நேற்றுமாலை அழுகிய நிலையில் இரு சடலங்கள் ஊர்காவற்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. எனினும், இவை அடையாளம் காணப்படவில்லை.

## பெயர் மாற்றம்

கதிர்காமத்தம்பி சிவசிரோன்மணி தம்பதிகளின் ஆறாவது புத்திரனாக 29.01.1979 இல் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் பிறந்த எனக்கு பெற்றோரால் சூட்டப்பட்ட **கந்தவப்பாதம்** என்ற பெயரினை இன்றுமுதல் **கபிலன்** எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

*"சின்னாலடி",*
*அல்வாய் மத்தி, அல்வாய்.* (சி-1031) **க.கபிலன்.**

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் கணேசரட்ணம்

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கணேசரட்ணம் அவர்கள் 25.05.2003 அன்று பிரான்சில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி மகாலிங்கத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி. கதிரவேலுவின் அன்பு மருமகனும், சுமதியின் அன்புக் கணவரும், திவ்வியா, ராகுல் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரட்ணசிங்கம், தனலட்சுமி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற அருட்பிரகாசம், ராஜலட்சுமி, விஜயலட்சுமி, கீதாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தையல்நாயகி, தருமலிங்கம், பத்மநாதன், யோகேஸ்வரி, நாகரட்ணம் மாஸ்டர், குணராஜா, லட்சுமிகாந்தன், செல்வரத்தினம், தனபாலசிங்கம், பற்குணம், சற்குணம், வசந்தா, யோகராசா, இலங்கேஸ்வரி, மைக்கல், தனேந்திரன்(நேசன்), பாபு ஆகியோரின் மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.05.2003 (சனிக்கிழமை) லண்டனில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்**
**01 34 64 34 52 (பிரான்ஸ்) - 06 09 44 30 43 (பிரான்ஸ்)**
**03 44 05 71 83 (பிரான்ஸ்) - 02 08 79 50 654 (லண்டன்)**
**07 96 81 67 466 (லண்டன்)**

*தகவல்-*
*மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,*
*மைத்துனர்மார், மருமக்கள்.*

(சி-1026)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.